★ ரூபா விலை 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 25 மார்கழி 22 ரபி-அவ் 21 இதழ் 329

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 6—1—83

MASTER
INSTITUTES
B M C லேன், யாழ்ப்பாணம்.
A/L விஞ்ஞானம்
வார இறுதி வகுப்பு
ஆரம்பம்: 8-1-83
5728

MASTER
INSTITUTES
B M C லேன், யாழ்ப்பாணம்.
A/L விஞ்ஞானம்
பகல் நேர வகுப்பு
3-ம் பிரிவு
ஆரம்பமாகின்றது
5729

## யாழ். எம். பி.யை தடுத்து வைத்திருந்தால்
# ராணுவ அதிகாரிகளை ஜனாதிபதி விசாரித்திருப்பார்!

### மாற்றலாகிச் செல்லும் பிரிகேடியர் தகவல்

(யா. அனந்தகிருஷ்ணன்)

'யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ.யோகேஸ்வரனை விசாரணைக்குட்படுத்திய தினம் முழு இரவும் அவரைத் தடுத்துவைத்திருந்திருப்போமானால், அதற்கான காரணத்தை ஜனாதிபதி உடனடியாக எம்மிடம் கேட்டிருப்பார்-'

யாழ். எம். பியை விசாரிக்கும்படியோ, அல்லது கைதுசெய்யும்படியோ ஜனாதிபதி எம்மைக் கேட்கவில்லை. எமது முகாமில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் விசாரணைகளில் ஓர் அங்கமாகவே எம். பி. திரு. யோகேஸ்வரனும் விசாரிக்கப்பட்டார்.

இவ்வாறு பிரிகேடியர் சிறில் ரணதுங்கா நேற்று தமது குருநகர் அலுவலகத்தில் வைத்து நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

பிரிகேடியர் சிறில் ரணதுங்கா கடந்த ஒரு வருடகாலமாக இங்கு பணியாற்றியவர் இந்த வாரத்திலிருந்து கொழும்பு இராணுவத் தலை

(8-ம் பக்கம் பார்க்க)

### யோகேஸுக்கு மேஜர் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

யாழ் எம். பி யோகேஸ்வரன் ஒரு சிறந்த பணிஞர். விசாரணைகளின்போது மிகவும் அருமையாக நடந்துகொண்டார். இவ்வாறு குருநகர் இராணுவ முகாமைச் சேர்ந்த மேஜர் குலதுங்கா நேற்றுத் தெரிவித்தார்.

யாழ் எம். பியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்' என்று கேட்ட கேள்விக்கே அவர் இப்படிக் கூறினர்.

விசாரணைகளின்போது அவருடன் வேறுயாராது வந்திருந்தனரா? என்றதற்கு.

அவர் ஒரு சட்டத்தரணி எனவே அவருக்கு அனுசரணையாக ஒருவர் வரவேண்டிய அவசியம் எழுந்திருக்கவில்லை. (வ)

## இனஐக்கியத்திற்கு விசேட குழு: "கூட்டணி செயற்குழு இறுதிமுடிவுஎடுக்கும்" - அமிர்

(கொழும்பு)

இனஐக்கியத்திற்கு சர்வகட்சி பாராளுமன்றக்குழு அமைப்பது பற்றி கூட்டணி செயற்குழு கூடி இறுதிமுடிவு எடுக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

கட்சித் தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் இவ்விஷயம் பற்றி பிரஸ்தாபித்ததாகவும் இதனை உத்தியோகபூர்வமாக கூட்டணிக்கு அறிவிக்குமாறும் செயற்குழு, அதுபற்றி இறுதி முடிவு செய்யுமென்றும் தான் பிரதமரிடம் கூறியதாகவும் திரு. அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்தார்.

அரசுக்கும், கூட்டணிக்குமிடையில் நடந்துவந்த பேச்சுவார்த்தையை மீண்டும் தொடருவதற்கு அரசோ அல்லது கூட்டணியோ முயற்சி எடுக்கவில்லை என்றும் அவர் கூறினர். (இ-க)

### மதகுருமார்களை சட்டத்தரணி சந்தித்தார்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருக்கும் வண பிதா சிங்கராயர், வண பிதா சின்னராசா ஆகியோரை நேற்றுச் சட்டத்தரணி சேவியர் சந்தித்தார். [இ]

## யாழ்.மேயர்மீண்டும் விசாரிக்கப்படுவார்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சிமன்ற முதல்வர் இராஜா விசுவநாதன் மீண்டும் இரகசியப் பொலிசாரினால் குருநகர் இராணுவ முகாமில் வைத்து விசாரணை செய்யப்படவுள்ளார்.

திரு. விசுவநாதன் கடந்த வருடம் மூன்று தடவைகள் இரகசியப் பொலிசாரினால் விசாரணை செய்யப்பட்டு, அவரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

யாழ் முதல்வர் அலுவலகத்தில்வைத்து ஒரு தடவையும், குருநகர் இராணுவ முகாமில் வைத்து இன்னொருதடவையும் இரகசியப் பொலிசாரால் விசாரணை செய்யப்பட்டார் (மா)

## ★ யாழ்ப்பாணத்தில் சாதனை செய்தவர் புதிய இராணுவத் தளபதி

[யாழ்ப்பாணம்]

இருபது வருடங்களுக்கு முன்னர் யாழ். நகரில் இடம் பெற்ற விளையாட்டுப் போட்டியொன்றில் குண்டெறிதல், பரிதி வட்டம்வீசுதல் ஆகியனவற்றில் சாதனைகளை நிலைநாட்டிய ஒருவரே குருநகர் இராணுவ முகாமின் புதிய தளபதியாகினர். பிரிகேடியர் ஜே ஜி பல்தஸார் என்பவரே இப்புதியவராவார்.

கத்தோலிக்கப் பறங்கியரான பிரிகேடியர், பல்தஸார் ஒரு சிறந்த விளையாட்டுவீரர்.

பிரிகேடியர் பல்தஸார் தமது பதவியேற்புப்பற்றித் தெரிவிக்கையில் இப்பிரதேசத்தில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதையே ஒரு இராணுவ வீரன் என்ற முறையில் எனது நோக்கமாகக் கொண்டுள்ளேன்" என்றார். (வ)

### கிளிநொச்சியில் துப்பாக்கிமுனையில் நகைகள் கொள்ளை

[கிளிநொச்சி]

துப்பாக்கிமுனையில் சுமார் 20 000 ரூபா பெறுமதியான நகைகள் கிளிநொச்சி கனகபுரம் 6ம் பண்ணையில் நேற்று நள்ளிரவு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. குமாரசாமி ஜெயக்குமார் என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளை நடந்துள்ளது.

முகமூடி அணிந்து வந்தவர்கள் வீட்டிலுள்ளவர்களை பயமுறுத்தி சித்திரவதை செய்த பின் கொள்ளையடித்ததாக கூறப்படுகிறது. துப்பாக்கி

(8-ம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்படவுள்ள 5 வழக்குகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பயங்கரவாததடைச்சட்டத்தின்கீழ் 5 வழக்குகள் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி சி. எல். ரி மூனமலே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஒத்திபோடப்பட்டது.

இன்ஸ்பெக்டர் குமார் கொலைவழக்கு முன்னர் நீதிபதி ரியுடர் டீ அல்விஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஜூரிகள் இல்லாமல் விசாரணை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டபோது எதிரியான குட்டிமணி இதனை ஆட்சேபித்து அப்பீல் செய்திருந்தார் அப்பீல் விசாரணை முடிவடையாததினால் இவ்வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது மார்ச் 29ம் திகதிக்கு ஒத்திபோடப்பட்டது.

இவ்வழக்கில் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் ஆஜரானர் அரச தரப்பில் அரச சட்டத்தரணி ஜி எச். எம். டி. சில்வா ஆஜரானர்

அச்சுவேலி ப. நோ. கூ. ச. கொள்ளை வழக்கும் ஒத்திப்போடப்பட்டது. இவ்வழக்கில் குட்டிமணி தங்கவேலு, ஜெகன், சரவணபவானந்தன் எஸ் குமார் ஆகியோர்மீது கொள்ளையடித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நீர்வேலி கொள்ளை பற்றி தெரிந்தும், சொல்லாமலிருந்ததாக ஏ பரியாம்பிள்ளை என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கு மார்ச்மாதம் 25-ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது

நீர்வேலி கொள்ளை பற்றித்

(8-ம் பக்கம் பார்க்க)

லிப்டன் இலங்கை லிமிட்டெட்
லாவோஜி தேயிலை
விலைமாற்றம் (1-1-1983)
புதிய விலை 1 கிலோ ரூபா 40/-
50 கிறும் பக்கற் ஒன்றின் சில்லறை விலை
ரூபா 2-20 சதம்
லிப்டன் இலங்கை லிமிட்டெட்,
கொழும்பு.
5740

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சுண்டிக்குளி விதானையார் வீதியில் 44-ம் இலக்க புதிய மாடி வீடு உடனடியாக விற்பனைக்குண்டு 8-1-83 தொடக்கம் 11-1-83 வரையுள்ள திகதிகள் நீங்கலாக மற்றைய திகதிகளில் நேரில் வரவும். தரகர் தேவையில்லை.
(5641)

### தேவை

அனுபவமும், திறமையும் வாய்ந்த தச்சுவேலை செய்பவர்கள் – மரத்தளபாடம் பொலிசிங் செய்யக் கூடியவர்கள், உதவியாளர்கள் தேவை நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். டில்காபேணிச்சர் பலஸ், 234, 236 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
5722

றெடிமேட் உடுப்பு வகைகள் தைப்பதற்கு நல்ல அனுபவம் வாய்ந்த பெண்கள் உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: எம். முஹம்மட் ரவூப், 43/1, வாங்சால் வீதி, யாழ்ப்பாணம். 5733

### தேவை

பெண்களுக்கு தையல் வகுப்பு நடாத்துவதற்கு யாழ் பஸ் நிலையத்திலிருந்து அரை மைல் சுற்றுடலுக்குள் அறை தேவை, (வீட்டின் பகுதியாகவும் இருக்கலாம்) விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் K. கனகசுந்தரம், 28, Convent Road, யாழ்ப்பாணம்.
5739


## அறிவித்தல்
## மின்தடை

இலங்கை மின்சாரசபையினரால் சில அத்தியாவசிய திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால், 08-01-1983-ம் திகதி சனிக்கிழமை காலை 7-30மணியில் இருந்து மாலை 6-30 மணி வரையும் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற எல்லைக்குள் மின்விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சி. வி. கே. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்.
மாநகராட்சிமன்ற அலுவலகம், யாழ்ப்பாணம்.
04-01-1983
5735

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
### மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

பதிவு செய்யப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சபைகள், வீடமைப்புத் திட்டச் சங்கங்கள், தனிப்பட்ட ஒப்பந்தகாரர்கள், ஏனையோர்கள் ஆகியோரிடமிருந்து யாழ்ப்பாண மாவட்ட வீடமைப்புத் திட்டங்களுக்கு கொங்கிறீற் கற்கள் விநியோகம் செய்வதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ் மாவட்ட கேள்விச் சபைத் தலைவரினால் 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ந் திகதி பிற்பகல் 3-30 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவங்களை இவ் அலுவலகத்தில் மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 500/-யும், மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 25/-யும் 21-1-83-ம் திகதி வரை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்

கேள்விகளுக்கு மனுச்செய்ய விரும்புபவர்கள் கேள்விப்பத்திர நிபந்தனைகளை
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
மாவட்ட முகாமையாளர்,
விடுதிக்கட்டிடம், காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்திடமிருந்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

| | கட்டிடப் பொருளின் விபரம் | 1983-ம் ஆண்டிற்கான தேவைப்படும் தொகை |
|---|---|---|
| 1. | கொங்கிறீற் கற்கள் | 595189 கற்கள் |

குறிப்பு:

கொங்கிறீற் கற்கள் — அளவு 12'' 6'' 5''
கலவை அளவு: சீமெந்து 1
மணல் 4
3/4'' கிறசர் சல்லி 8

தண்ணீரில் 7 நாட்கள் ஊற விடப்படுதல் வேண்டும் விநியோகம் பெப்ரவரி 83 தொடக்கம் ஜூலை 83 வரையான காலப்பகுதியாகும். இக்காலப்பகுதிக்கான பெறுமதி வாய்ந்த பிரத்தியேகக் கேள்விகள் பின்வரும் அடிப்படையில் கோரப்படுகின்றன.

அ. சீமெந்துக் கூட்டுத்தாபனத்திலிருந்து கிடைக்கப்பெறும் சீமெந்தின் விலையில்,
ஆ. வெளிச் சந்தைகளிலிருந்து கிடைக்கப்பெறும் சீமெந்தின் விலையில்,
இ. ஏற்றுக்கூலி, இறக்குக்கூலி போன்ற சகல செலவுகளும் உட்பட 1000 கொங்கிறீற் கற்களை உற்பத்தித் தொழிற்சாலையிலிருந்து வீடமைப்புத் திட்டங்களுக்கு ஏற்றிச்செல்வதற்கான வான்கூலிமைலுக்கு/மைல்களுக்கு.
ஈ. மாதாந்த உற்பத்தியும் விநியோகத்திறனும் உற்பத்தித் தொழிற்சாலையின் முகவரியும் குறிப்பிடப்படல் வேண்டும்.

மாவட்ட முகாமையாளர்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.
(5736)

## நன்றியும் பாராட்டும்

(யாழ்ப்பாணம்)

சர்வஜன வாக்கெடுப்பின் போது யாழ். மாவட்டத்திலேயே யாழ்ப்பாண தொகுதியில் அதிக வாக்குகளை ஐக்கிய தேசியக்கட்சிக்கு அளித்தமைக்காக யாழ் முஸ்லிம் வட்டார ஐ. தே. கட்சியின் உபதலைவர் திரு. ஏ. ஸி. எம். பரீத் தமது வட்டார மக்களுக்கு நன்றிதெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண தொகுதி ஐ. தே. க அமைப்பாளர் ஜனாப் எஸ். ஏ. சி. முவீன் சர்வஜன வாக்கெடுப்பின் போது ஆற்றியுள்ளசேவையை அவர் பாராட்டியுள்ளார்.


WANTED GRADUATE

To teach Tamil and Social Studies in Gr. 6-10.
Apply giving particulars before 10-1-1983

RECTOR,
St. Patrick's College
Jaffna.
5743


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

உடுவில் றோட், மானிப்பாயைச்சேர்ந்த செல்லையா காசிநாதர் என்பவரின் மரணசாதனமில்லாத சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. T/3693

செல்லையா காசிநாதர் கைம்பெண் பாக்கியரத்தினம், உடுவில் றோட், மானிப்பாய்.

மனுதாரர்.

மேற்குறித்த இலக்கங்கொண்ட தத்துவ வழக்கு மேற்காணும் இறந்தவரின் மரணசாதனமெழுதாதசொத்துக்களை நிர்வகிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அவர்க்கு வழங்கப்பின்னுறுதிக்கட்டளைபதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1983ம் ஆண்டு தை மாதம் 7ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி இவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றுனதாக்கப்படலாகா தென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982ம் ஆண்டு ஆவணி மாதம் 30ந்திகதியாகியஇன்று திகதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
தா. குலஞானம்
பதிவாளர்

வை. ச.செந்தில்நாதன்
மனுதாரரின் சட்டத்தரணி
5730

# "வறுமையைத் துடைப்பது சைவமக்கள் கடமை"

[யாழ்ப்பாணம்]

"வறுமைகாரணமாகத் துன்புறும் சைவமக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவர்களின் இடர்களைத் துடைப்பது சைவமக்கள் ஒவ்வொரு வரதும் கடமையாகும்"

இவ்வாறு நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் நடைபெற்ற திருவெம்பாவை விழாவில் உரையாற்றுகையில் திரு. மு. ஜெயரத்தினம் குறிப்பிட்டார்

தேவஸ்தான கர்த்தா சி சுப்பிரமனியக்குருக்கள் தலைமையில் அவர் தொடர்ந்து பேசுகையில், "சைவத்தில் நான்கு வருணம் நான்கு ஆச்சிரம் என்பன வலியுத்தப்பட்டது போன்று சாதி அமைப்பு வலியுறுத்தப்படவில்லை. அனைவரும் முத்தியின்பம் அடைய வேண்டும், என்பதே சைவத்தின் குறிக்கோள் என்றும் குறிப்பிட்டார்

இவ்விழாவில் திரு. சி மருதபிள்ளை, திருமதி சி அருந்ததி திரு. எஸ். பொன்னுச்சாமி திரு. குருசாமி ஆகியோரும் உரையாற்றினர்.

திருவெம்பாவைக் காலத்தில் தினமும் பஜனை நடைபெற்றதும். ஆலயச்சூழலில் மரக்கன்றுகள் நட்டதும் குறிப்பிடத்தக்கது.

[ப]

## கொடி வரைந்தோருக்கு சன்மானம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைக்கான கொடியை வரைந்த மன்னார் பட்டினத்தைச்சேர்ந்த இருவருக்கு தலா 250ரூபா வீதம் மொத்தம் 500 ரூபா மன்னார் மாவட்ட அபிவிருத்திசபையால் சன்மானமாக வழங்கப்படும்.

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மன்னார் மூர் வீதியைச் சேர்ந்த ஜனாப் செயனுலாப்தீன், திரு. செல்வகுருநாதன் ஆகிய இருவருக்கே சன்மானம் வழங்கப்படும்.

## அல்வாயில் இணக்கசபை

[புலோலி]

அல்வாய் மேற்குக் கிராமப் பகுதி மக்களுக்கிடையே நடைபெறும் சிறு பிரச்சினைகள், சச்சரவுகளைத் தீர்த்துவைக்கு முகமாக இணக்கசபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அல்வாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இவ் இணக்கசபை அமைப்புக் கூட்டத்தில் இணக்கசபையின் தலைவராக திரு. கே. வல்லிபுரம் [ஜே. பி] யும், உறுப்பினர்களாக க. தங்கராசா, எஸ். இராஜகோபால், டாக்டர் வேலும் மயிலும், எஸ். பெருமாள் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிராமோதய சபைத் தலைவர், கிராம சேவை அலுவலர், விசேடசேவை உத்தியோகத்தர் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

குடத்தனை கரையூர் கிராமோதய சபையின் இணக்க சபைத் தலைவராக திரு. அ. வேதநாயகமும் செயலாளராக விசேட சேவை அலுவலர் திரு. க. சிவராசாவும். உறுப்பினர்களாக திரு. மு. அழகராசா, திரு. யோ. மரியாம்பிள்ளை, திரு. வ. முத்துவேலு, திரு. ம கேவரத்தினம், திரு சி தியாகலிங்கம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். இவ் இணக்கசபை கிராமசேவை அலுவலரின், அனுசரணையுடன் இயங்கும்.

## இன்று சுப்பிரமுனிய சுவாமிகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் இன்று நண்பகல் நல்லை நாவலர் நிலையத்திற்குச் செல்வார். தனது மாணவர்களுடன் செல்லும் இவர், நாவலர் சிலைக்கு அஞ்சலி செலுத்துவார்.

நாவலர் நிலையக் குழுவினர் சுவாமிகளுக்குப் பாத பூசை செய்து வரவேற்றபின் சுவாமிகளின் ஆசி உரையும் இடம் பெறும்; (ப)

## தாம்போதி சிரமதான பணியில் உப-தபாலதிபர்கள்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை தமிழ் பேசும் உப-தபாலதிபர்கள் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளை இம்மாதம் மகாதேவா தாம்போதி சிரமதான பணியில் ஈடுபட ஏற்பாடு செய்து வருகிறது.

இக்கிளையில் அங்கம் வகிக்கும் நூற்றுக்கு மேற்பட்ட உபதபாலதிபர்கள் இச்சிரமதானப்பணியில் ஈடுபடவிருப்பதாக இக் கிளையின் தலைவர் திரு சி இரத்தினசபாபதி தெரிவித்தார்.

[வண். நிரு]

## எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

தாயின் நகைகளைத் திருடியதாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் மகன் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 82 ஏப்ரல் 18ம் தேதி கந்தர் மடத்தைசேர்ந்த அ. மரியம்மா விடமிருந்து நகைகளை திருடியதாக, நீர்வேலியை சேர்ந்த சின்னராசா யோசேப்பின் மிக்கெல்லாமீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் சட்டத்தரணி வி. லிங்கராசாவின் உதவியுடன் ஆஜரானார்,

[க]

## ரூபா 2லட்சம் நிதி ஒதுக்கீடு

(புலோலி)

வல்வெட்டித்துறை மகளிர் மகாவித்தியாலய மாணவர்களின் நன்மை கருதி மாடிக் கட்டிடமொன்று அமைக்கப் படவுள்ளது இம்மாடிக் கட்டிடமுதலாம்கட்ட வேலைக்கென உடுப்பிட்டி எம். பி திரு த. இராசலிங்கம் 1,25,000 ரூபா நிதியைப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடுசெய்துள்ளார்.


## தேவை
### நாவல் மரங்கள்

3 அடி சுற்றுக்கு மேற்பட்ட 8 அடி நீளமுள்ள சிறு வளைவுள்ள நாவல் மரங்கள் தேவை
கையிருப்பிலுள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

வர்த்தக அதிகாரி,
சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்,
குருநகர், யாழ்ப்பாணம்.
(5737)

யாழ்ப்பாணம்

# "இனவாத அரசியலுக்கு இந்த நாட்டில் இனி இடமில்லை" — பாராளுமன்றத்தில் தொண்டமான்

(கொழும்பு)

"இந்த நாட்டில் இனவாத அரசியலுக்கு இனி இடமில்லை என்பதை அத்தனகலை உறுப்பினர் உணர்ந்துகொள்ளவேண்டும். இந்த நாட்டு மக்களில் 80 சதவிகிதமானோர் ஏழைகள்; அவர்களின் வறுமை அகற்றி, அவர்கள் வாழ்வை மலரச்செய்வதில் ஜனாதிபதி திடசங்கற்பம் கொண்டுள்ளார். தமிழர் சிங்களவர் என்ற இனவாதப் போக்கு நம்மை அதிக தூரம் கொண்டுசெல்லாது. நாடும் முன்னேற்றம் அடையாது

இவ்வாறு பாராளுமன்றத்தில் அமைச்சர் எஸ். தொண்டமான் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

அண்மையில் நடைபெற்ற அபிப்பிராய சர்வஜன வாக்கெடுப்பில் ஜனாதிபதியுடன் நான் பிரசாரம் செய்தேன் அப்போது தொண்டமானின் வருகையால் கிடைக்கும் தமிழ் வாக்கு ஒவ்வொன்றுக்கும் இரண்டு சிங்கள வாக்குகள் எதிராக விழும் என்று கூறப்பட்டது அப்படியான முறையில் சிந்திப்பவர்கள் எமது தரப்பிலும் இருக்கிறார்கள் இப்படியான சிந்தனைகளுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

"அத்தனகலை எம்.பி. பேசுகையில், 'மேச்சல் நிலங்கள் ஒதுக்கிவைத்தல், அபிவிருத்தி சட்ட மூலம் அரசு நிலத்தை பொறுப்பேற்று அந்நியர்களுக்குக் கொடுக்கமுயல்வதாகக் கூறினர் நூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டுக்கு உழைத்த எனது மக்களையே அத்தனகலை எம். பி. அந்நியர்கள் என்று குறிப்பிட்டார். ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தனவின் ஆட்சியில் அப்படியான நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும்.

"தமிழர், சிங்களவர் என்ற பேதம் இல்லை. எல்லோரும் இலங்கையர் என்பதே அரசியல் சாசனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

'நான் தொழிற்சங்கவாதி. தொழிலாளர்களை எவ்வாறு ஒரு அமைப்பின்கீழ் கொண்டுவந்தேனோ, அதேபோன்று இந்த நாட்டு விவசாயிகளையும் நான் அமைப்பின்கீழ்கொண்டு வருவேன். அரசாங்க அதிகாரிகளின் தாளத்துக்கு ஆடுபவன் நான் அல்ல! கால்நடை வளர்ப்பவர்கள். எம். பிக்கள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டு, நடைமுறைச்சாத்தியமான நடவடிக்கைகளையே நான் எடுத்துவருவேன்.(இ)

## இங்கிலாந்து அவுஸ்திரேலிய கிரிக்கெட்டெஸ்ட்

சிட்னி, ஜன 5

இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவிற்குமிடையே சிட்னியில் நடைபெற்றுவரும் 5-வது கிரிக்கெட்டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று அவுஸ்திரேலியா முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 314 ஓட்டங்களைப்பெற்றது

இங்கிலாந்து கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 76 ஓட்டங்களை எடுத்திருந்தது. (வெ)

## கிரிக்கெட்டெஸ்ட்: இந். 334-7

இஸ்லாமாபாத், ஜன. 5

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நேற்று ஆரம்பமான 3-வது கிரிக்கெட்டெஸ்ட் போட்டியில் இந்திய கோஷ்டி முதலாவது இனிங்ஸில் 7 விக்கட்டுகளை இழந்து 334 ஓட்டங்களைப்பெற்றது.

இதில் பட்டேல் 85 ஓட்டங்களையும், விஸ்வநாத் 54 ஓட்டங்களையும் பெற்றனர். கிருமானி 57 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழக்காதுள்ளார். (வெ)

## நேர்முகப் பரீட்சை நடைபெறவில்லையாம்

(கிளிநொச்சி)

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் கிளிநொச்சி உப அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள மின்சார ஊழியர் வெற்றிடத்தை நிரப்ப விண்ணப்பங்கள் கோரி பல மாதங்களாகியும் இதுவரை நேர்முகப் பரீட்சை நடைபெறவில்லை. என்று கூறப்படுகிறது.

மின்சார ஊழியர் பற்றாக் குறையால் உயர்மின்சார அதிகாரிகளே பழுதடையும் மின்சாரத்தை சீர் செய்யவேண்டியுள்ளதுடன் மின்கம்பங்களிலும் ஏறவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் மின்சார உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

## "தேசிய இளைஞர் சேவை மன்றங்கள் மூலம் அபிவிருத்திகளை மேற்கொள்வது அரசின் சிறந்த பணிகளில் ஒன்று" -- கிளிநொச்சி எம். பி.

(கிளிநொச்சி)

"யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றம் இப் பயிற்சி முகாம் அமைக்கப்பட்டதால் அபிவிருத்தியில்கூடுதல் அக்கறை எடுக்கும் என நம்புகிறேன்".

நாலரை லட்சம் ரூபா செலவில் கிளிநொச்சி "தொண்டமான் நகரில்" புதிதாக அமைக்கப்பட்ட யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றப் பயிற்சி முகாமைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா மேற்கண்டவாறு கூறினர்.

தேசிய சேவை மன்றப் பொறுப்பதிகாரி திரு. அ. நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் யாழ் அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- யாழ் மாவட்டம் சனத்தொகையில் கூடிய ஒரு ஒரு மாவட்டம் யாழ். குடாநாட்டிற்குள் வாழும் மக்கள் குடாநாட்டிற்கு வெளியிலுள்ள கிளிநொச்சித் தொகுதியில் குடியேறுவதற்கு காணிகள் வழங்கவேண்டும்.

கிளிநொச்சித் தொகுதியை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள் நாங்கள் அதனால்தான் யாழ்ப்பாணத்திலுள்ள சகல இலாகாக்களிற்கும் கிளிநொச்சியில் காணிகளை வழங்கியுள்ளோம். தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கு வழங்கிய காணியை மேற்படி மன்றம் பொறுப்பு ஏற்று திறம்பட நடாத்தி வருகின்றது. அவ்வாறு எல்லா இலாகாக்களும் செய்ய முன்வருமேயானால் யாழ் நகருக்கு அடுத்த

[6-ம் பக்கம் பார்க்க]

## காங்கேசனில் மேலும் மின் இணைப்பு

(மயிலிட்டி)

காங்கேசன் துறைத் தொகுதியில் மேலும் சிலபகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவது பற்றி ஆராயப்பட்டுவருகிறது.

இந்தத் திட்டங்களால் மேலும் ஒன்பது இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

கருகம்பானை அட்டமுட்டை மிகுதிப்பகுதி, மாரிசன்கூடல், சிந்திப்பத்தல், விளிசிட்டி. தையிட்டி மிகுதிப்பகுதி, பெரியவிளான், தோளோடை தெல்லிப்பழையிலுள்ள குருந்தன் கோட்டை, சித்திய புளியடி, அளவெட்டியிலுள்ள நகுலேஸ்வரா. ஊத்தன் மோட்டை, கொல்லங்கலட்டி கலட்டிமிகுதிப்பகுதி போன்ற இடங்களுக்கே மின்சாரம் வழங்குவதுபற்றி ஆராயப்படுகிறது.

குடும்பத் திட்டம் அனுசரிப்பு:

# "இலங்கைத் தமிழர் ஒருசத வீதத்தால் மட்டும் அதிகரிப்பு

## இந்தியத் தமிழர் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது"

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தமிழர் குடும்பத் திட்டத்தை அனுசரிப்பதால், 25 லட்சம் தமிழரில் ஒரு சதவீதம் மாத்திரம் அதிகரித்திருக்கிறது. இந்திய தமிழரில் குறிப்பிட்ட தொகையினர் இந்தியா சென்றுள்ளதால் பிறப்பு விகிதம் குறைந்திருக்கிறது.

யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா, யாழ். மாவட்ட சனத்தொகைக்குழுவும் தேசிய கூட்டுறவுச்சங்க யாழ். கிளையும் இணைந்து நடத்திய பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு. சிஸ் சிவதாசன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

திட்டமிடல் பகுதி அதிகாரி திரு. எஸ். புவனேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. தேவநேசன் நேசையா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இலங்கையிலுள்ள சுமார் ஒன்றரைக்கோடி மக்களில் 72 வீதம் சிங்களவரும், 12, வீதம் இலங்கைத் தமிழரும், 9 வீதம் இந்தியத்தமிழரும், 7 வீதம் முஸ்லிம்களும் வாழ்கிறார்கள்.

திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு.சிவதாசன் தலைமையுரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது: "குடும்பத்திட்டத்தை சரிவர அனுசரிக்காவிட்டால் இன்னும் 20 வருடத்தில் சனத்தொகை 300லட்சம் மக்களாக அதிகரித்துவிடும். இதனால் போஷாக்கான உணவு; போதிய உடை; பாதுகாப்பு போன்றவற்றை அளிப்பதுகஷ்டமாயிருக்கும். மேலும் கல்வி வசதியைப் பொறுத்தவரை பாடசாலை-பல்கலைக்கழகம் போன்றவற்றிலும் மாணவர்கள் தொகை அதிகரிப்பால் சமாளிக்கமுடியாதஒருநிலைமை ஏற்படும்.

"திட்டமிட்ட முறையில் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமானால், குடும்பத்திட்டத்தை முழுமையாக மக்கள் அனுசரிக்கவேண்டும்".

யாழ். மாவட்ட சனத்தொகைக்குழு நடாத்திய "துரித சனத்தொகைவளர்ச்சியால் ஏற்படும் விளைவுகள்' என்ற தலைப்பிலானகட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (மா)

## வீடு தீவைப்பு: சந்தேகநபர் விடுதலை

(மாவிட்டபுரம்)

வீடு தீவைப்பு சம்பந்தமாக கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்ட சந்தேகநபர் மல்லாகம் நீதிபதியால் விடுதலை செய்யப்பட்டார்.

இராலியைச் சேர்ந்த ரஜிநாதன் பவுண் என்னும் பெண்மணி வீட்டிலிருந்த சமயம் வீடு தீப்பற்றி எரிந்து நாசமடைந்ததுடன் இப் பெண்மணியும் தீக்காயத்திற்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமாகியிருந்தார்.

இந்த வீட்டுக்கு தீ வைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்பட்டு உடுவில் மல்வத்தைச் சேர்ந்த முருகேசு கமலநாதன் என்பவர் இதுதொடர்பாக கைதாகி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நபர் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இச்சம்பவம் தொடர்பாக மேற்படி சந்தேக நபர்மீது குற்றம் சுமத்த சான்றுகள் இல்லையென காங்கேசன்துறைப் பொலிசார் தெரிவித்தனர்.

மேற்படி வீட்டுக்கு தீவைக்கப்படவில்லையெனவும், தற்கொலை முயற்சியின் போதே வீடும் தீ பற்றிக் கொண்டதாக விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதையடுத்து நீதிபதி திரு சி. வி. விக்னேஸ்வரன் சந்தேக நபரை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

## கிளிநொச்சியில் முதல் தடவையாக நடக்கும் விவசாயிகள் முகாம்

(கிளிநொச்சி)

விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் இலங்கையில் முதல் முதலாக கிளிநொச்சியில்தான் ஆரம்பிக்கப்படுகிறது. இத்திட்டம் வெற்றியளிக்கும்வேளை நாடு பூராகவும் நடைமுறைப்படுத்தப்படும். பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படும்இத்திட்டம் வெற்றியளிக்க இப்பிரதேச விவசாயிகள் எம்முடன் சேர்ந்து பாடுபடவேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சியில் உள்ள வடபிரதேச விவசாய சேவைக்கால பயிற்சி நிலையத்தில் விவசாயிகளுக்கானபயிற்சி முகாமொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் வடபிரதேச உதவி விவசாய பணிப்பாளரும் பிரஸ்தாப பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரியுமான திரு. கே. வரதராசா குறிப்பிட்டார்,

ஐம்பதுக்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்ட இவ்வைபவத்தில் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். விவசாய உதவிப் பணிப்பாளர் திரு வரதராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இன்று ந்த விவசாயிகளுக்கு நேரடிப் பயிற்சியளிக்கப்பட்டது. பழையமுறைகளை பின்பற்றுவதால அதிக விளைச்சலை விவசாயிகள் பெறமுடியாது என்பதை இப்பயிற்சியில் கண்டுள்ளீர்கள். விவசாயிகள் நெல்லைமட்டும் உற்பத்தி செய்வதுடன் நின்றுவிடாமல் மாற்றுப் பயிர்ச்செய்கைகளிலும் ஈடுபடவேண்டும். ஒவ்வோர் விவசாயியின் வீட்டிலும் கொய்யா மரம் நாட்டுதல்வேண்டும் சிறுவர்கள் சக்தி குறைவால் எத்தனையோ நோய்களிற்காளாகின்றனர். கொய்யா, பப்பாசி போன்ற பழங்களில் சிறுவர்களிற்கான சத்து அதிகம் உண்டு. வடபகுதி பப்பாப் பழத்திற்கு தென் இலங்கையில் நல்ல வரவேற்பு உண்டு. பப்பா மரங்களை அதிகளவில் நாட்டி வடபகுதி விவசாயிகள் தமது பொருளாதாரத்தைமேம்படுத்தலாம் ஆயுர்வேத மருந்து மூலிகைகளிற்குஇன்றுநாட்டில் கடும தட்டுப்பாடு நிலவுகிறது. இத்தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு இச்சேவைக்காலப் பயிற்சி நிலையத்தில் கிளிநொச்சிப் பகுதி ஆயுர்வேத வைத்தியர்களின் உதவியுடன் மூலிகை பயிற்சி வளர்ப்பு நிலையம் ஒன்றை நிர்மாணிக்கவும் திட்டமிட்டுள்ளேன். இரணைமடுக் குளத்தில் நீர் பெறும் விவசாயிகளிற்கு இலங்கையில் முதன்முதலாக இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. முற்றும் முழுதான விவசாயப் பிரதேசமான கிளிநொச்சி விவசாயிகள் இப் பயிற்சியைப் பெறுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டம் வெற்றி பெற உங்கள் அனைவரின் மேலான ஒத்துழைப்பையும் கோருகிறேன்.

மணிவாக்கு

சோம்பேறித் தனம் ஊர்ந்து செல்லும் போது வறுமை அதை வழியிலேயே பிடித்துக்கொள்கிறது.
— பிராங்க்லின்

# நமது நோக்கு

## இன ஐக்கியம்

எங்கள் அரசியல் அகராதியில் நன்றாகத் தேய்ந்து உருக்கொட்ட சொற்கூட்டம் 'இன ஐக்கியம்'!

தேசிய ஒருமைப்பாடு என்ற கபடமற்ற கருத்து சிங்களமக்களுக்கு ஒருவித கருத்து; தமிழ் மக்களுக்கு அதற்கு முழுமாறான கருத்தாக வந்தளவில் கைவிடப்பட்டிருக்கிறது.

'இன ஐக்கியம்' எவ்வாறு கசக்கப்பட்டாலும் 'பிளாஸ்ரிக்' போல் நலங்காத பண்பு பொதிந்திருக்கும் விடயம். நாம் அதனைப் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ள மறுப்பது ஞானமாகாது.

இனஐக்கியத்தைப் பலப்படுத்துவதற்கு சர்வகட்சிகள் கொண்ட விசேடகுழு ஒன்று அமைக்கப்படவேண்டுமென்ற ஆலோசனையை ஜனாதிபதி ஜெயவர்த்தனா பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் வழங்கியிருக்கிறார்; இது ஒரு புதுத்தொடக்கம்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை இன்று நாட்டை ஆளும் 'அரசனாக' மக்கள் தெரிந்தெடுக்கின்றனர்; பாராளுமன்ற ஆதரவுடன் நாட்டை முன்னேற்றுவதில் தீவிரப்பட வேண்டிய பொறுப்பு அவருக்குண்டு; அவர் குறிப்பிட்ட கருத்துகள் இரண்டு இந்தப் பொறுப்புணர்வை தெளிவுபடுத்துகின்றன.

ஒன்று: ''புலிப்படைகளின் வன்முறைப் பிரசாரங்களிலிருந்து சிறுபான்மை மக்களின் பிரச்னைகள் வேறுபடுத்த வேண்டும்: ஈழம் கோருபவர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கவேண்டும்

இரண்டு; நாட்டில் பிளவை ஏற்படுத்த ஐ.தே. கட்சி அரசாங்கம் இடமளிக்காது.

இவ்விரு கருத்துக்களும் உண்மையில் முரண்பட்டவையல்ல. ஆயினும் பார்வைக்கு இரண்டாவது முதலுக்கு முரண்பட்டதாக எம்மிற் பலர் கருதுவது இயல்பு.

நாட்டில் பிளவை ஏற்படுத்த எந்த அரசியல் கட்சி ஆட்சியிலிருந்தாலும் அது இடமளிக்காது.

ஆதேசயம, நாட்டைப் பிளவுபடுத்துவதாலேதான் எம்மை ஆளும் உரிமையும் அதிகாரமும் எமக்குக் கிடைக்குமென்று வாதாடுவதும் விவேகமாகாது.

'இன ஐக்கியம்' என்பது பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆட்சி, சிறுபான்மையாகிய தமிழருக்கும் ஏனையோருக்கும் இடமளித்து, அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வது என்ற கருத்துடையதானால் அது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இது இன்றைய தமிழ் சமூகத்தின் தெளிந்த நிலை.

இனக்கலவரங்கள், அரசு பயங்கரவாதம், ஆட்சியின் இனப்பாகுபாடு—இவை எத்தனை துன்பங்களை ஏற்படுத்தியபோதும், இன்று உருவாகும் தமிழ் இளைஞர் சமூகம், எல்லாம் இழந்தவனுக்கு அடிமையின் சங்கிலிதான் பறிபோகும் என்ற தீவிரஉணர்வு அச்சத்துக்கு எவ்வித இடமும் அளிக்காது.

'இன ஐக்கியம்' என்பது இக்காரணத்தால் பெருஞ் சந்தேகத்துக்குரிய விடயமாய்விட்டது.

அரச பதவியில் அமர்ந்திருக்கும் ஜனாதிபதி [illegible] நிலையைப் புரியும் வல்லமையும் அரசியல் ஞானமும் உடையவர், தமது சிங்கள மக்களை அவ்வாறு சிந்திக்கச் செய்யும் செல்வாக்கு உண்டோ என்பது கேள்விக்குறியே!

இந்த விடயத்தை அணுகும்போது [illegible] தந்திரம் அல்லது அரசியல் சூழ்ச்சி ஒருபோதும் பலனளிக்காது.

இது ஒரு நாட்டின் ஆட்சியில் அதன் சிறுபான்மையினரை எவ்வளவு தூரம் திருப்திப் படுத்தலாமென்ற கேள்வியல்ல; இது நிச்சயமாக புரியவேண்டியது.

நாட்டின் நிரந்தரசமூகம் ஒன்று பல்லாண்டுகளாக இந்த நாட்டில் பெரும்பான்மையினராகிய சிங்கள மக்கள் போல், குறிப்பிட்ட நிலப்பரப்பில் தங்கள் மொழி, மத கலாச்சாரத்தின் அடிப்படையில், கல்வி, தொழில், வணிகம் முதலிய துறைகளில் தம்முடைய பண்பாட்டுக்கேற்ப வாழ்ந்துவந்த மக்கள் - இவர்கள் இந்நாட்டின் தமிழசமூகம்.

இவர்கள் ஆளப்படுபவர்கள் என்ற இன்றைய நிலை முற்றாக ஒழிவதானால் இனஒற்றுமை—ஒரு தேசத்தில் இரண்டு சமூகங்கள் தனித்தனியே தங்களை ஆள்வதும் ஒருநாடு என்ற ஒற்றுமைப்பட்ட நிலையில் இருவரும் சேர்ந்து முழுநாட்டை ஆள்வதும் எவ்வாறு என்று கண்டுபிடிப்பதில் இன ஒற்றுமை தங்கியுள்ள இடமுண்டு. ஒருநாடு என்றலட்சியம் கைகூடும்.

இதற்கெதிராக வழங்கப்படும் ஆலோசனைகள் நீண்டகாலம் போராடும் தமிழ் மக்களை ஏமாற்றும் தன்மையுடையவை.

நாட்டைப் பிரிக்கும் முயற்சியில் தமிழ் மக்களின் அரசியல் உருவெடுக்கிறதென்பது தீமைக்கிடமளிக்கும் தேசவிரோத சக்திகளின் பிரசாரமாகும். தப்பபிப்பிராயத்தில்தோன்றிய தீமை அது.

ஆட்சியாளருக்கு இதன் சூழ்ச்சி விளங்க முடியும்; இருப்பினும் அவ்வித குழப்பக்காரரை சாந்தப்படுத்தவே இதனை மறுக்கவேண்டிய, அவசியமற்ற பகிரங்க கூற்றுக்கள் அடிக்கடி காதைப் புளிக்கவைக்கின்றன

சங்கு சுட்டாலும் வெண்மை தருமென்'பது போல், சுயபரியாலதயில் மேம்பட்ட ஒரு தனிச் சமூகம் ''நாட்டின் பெருமை'' என்ற நூலில் பல ஒளிபரப்பும் அத்தியாயங்களை 'எழுதி'விட்ட சமூகம் இன்று நொந்துபோயிருப்பினும், மீண்டும் தலையெடுதது தன்னுடைய அலுவல்களைத் தானே நிறைவேற்றும் அதிகாரம் பெறும் ஆற்றல் உடையது; இதுவே இன்றைய இளைஞர்களின் ஆழமான அபிலாஷை

எனவே இன ஐக்கியம், சுதந்திர சமூகங்களாகிய, இந் நாட்டின் ஆதிகாலம் தொட்டு வாழ்ந்துவந்த சிங்கள — தமிழ் மக்களின் சம உரிமையில் அமைக்கப்பட வேண்டிய அரசியல் நீதி.

இதற்கொவ்வாத எப்பெரும் சலுகைகள்தானும், தமிழ் மக்கள் சுதந்திர இலங்கையின் முதற்தர மக்களென்பதை நிலைநாட்டமாட்டா.

---

பயிற்சிபெற்ற

# இந்த ஆசிரியர்களை தீவுப்பகுதிக்கே தருக!

## எம்.பியும் பொது ஸ்தாபனங்களும் கோரிக்கை

(மண்டைதீவு)

தீவுப்பகுதியிலிருந்து ஆசிரிய பயிற்சி பெறச் சென்ற ஆசிரியர்கள் குறித்த பயிற்சிக் காலத்தை முடித்துக்கொண்டு இவ்வாண்டு முதல் வெளிமாவட்டங்களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இதனால் தீவுப்பகுதிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை மேலும் தோன்றியுள்ளது. இந்த நிலையினால் இ பகுதிப் பாடசாலை அதிபர்கள் மத்தியிலும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் இந்த வெளி மாவட்ட நியமனத்தையொட்டி பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது. இப்பகுதியில் கடமையாற்றிய ஆசிரியர்களை மீண்டும் அதே பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்குமாறு தீவுப்பகுதி எம் பி பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் கல்விச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் திரு. ஆரியரட்னவை அவசர தந்தி மூலம் கோரியுள்ளார்.

இதனைவிட இப்பகுதி கிராமோதயசபைத் தலைவர்களும் இந்த வெளி மாவட்ட நியமனங்களை ரத்துசெய்து இப்பகுதி கல்வி வளர்ச்சிக்கு கைகொடுத்து உதவுமாறு கல்வி அமைச்சுக்கு கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்கள்.

---

## உண்மை இதுதான்!

'ஆழிக்குமரனை யாழ்ப்பாணம் கௌரவிக்கிறது' என்ற தலைப்பில் வெளியான தங்கள 2-ம் திகதி பத்திரிகைச் செய்தியில் சில தவறுகள் இருக்கின்றன.

நானும் அந்நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டதால், இதனைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

நான் ஆழிக்குமரனுடன் மூன்று பந்தயங்களில் போட்டியிட கட்டுப்பணம் கட்டி, அவருடன் 31ப் திகதி இரவு மிகவும் சந்தோஷமாக முதலாவது 'செஸ் எக்ஸ்பாண்டர் போட்டி'யில் கலந்துகொண்டேன். ஒரு நிமிடத்துக்கு எத்தனை தடவை இழுப்பது தான் போட்டி விதி என்பது மேடைக்கு வந்த பின்னர்தான் தெரியவந்தது. இருந்தும், வைத்தகாலைப் பின்வாங்காமல், அவரது 'சிஷ்டன்' காட்டிய வழியில், 30 வினாடியில், பத்துத் தடவை இழுத்தேன். அதே போட்டியில் ஆழிக்குமரன் 24 வினாடியில் 34 தடவை அதனை இழுத்து வெற்றிபெற்றார். அத்தோடு என்னையும் தட்டிக்கொடுத்து 'பயிற்சி காணாது' என்று பாராட்டினார்.

பின்னர், இன்னொரு பலம் வாய்ந்த 'செஸ் எக்ஸ்பாண்டர்' கொடுத்து தலைக்குப்பின்னால் வைத்து இழுத்துக் காட்டி. இந்த மேடையில் யாராவது செய்யமுடியுமா? என்று கேட்டார்.

அதற்கு உடனே ''ஸ்பிறிங்கை'' வாங்கி, முக்கால்வாசி இழுத்து, இறுதியில் ஸ்பிறிங்கை உடம்பைச்சுற்றி வளைத்து இரு கைகளால் இறுக இணைத்துப் பிடித்தேன். அந்த டொனிக் பிழை'' என்று ஆழிக்குமரன் சொல்லி, வேறு யாரையும் அழைத்தார். உடனே நண்பர் ஐ நடராசா வந்து பத்துப் பதினைந்து தடவை இழுத்தார். ஆனால் அந்த ஸ்பிறிங்கை ஆனந்தனால் பின்னுக்கு முறையாக இழுக்கமுடியவில்லை.

அடுத்து நான் பாரம்தூக்கும் போட்டிபற்றிக் கேட்டேன். அதற்கு அவர் 'தனது பிலியட்ஸ் உலக சாதனை இருக்கிறது; அது முடிந்ததும் செய்வோம்'' என்று கூறினார் நான் ஆசையோடுசாதனை எப்போது முடியும் என்று கேட்டேன். ''ஒன்றரை மணி நேரம்'' என்றார். அப்போது இரவு 9-30 மணி. நான் எனது மனைவி, மக்களுக்குத் தெரியாமல் அங்கு வந்தவன் நடராசாவிடம் பாரம் தூக்கும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஆனந்தனை அணுகி மோட்டார் சைக்கிள் ஓட்டப்போட்டிபற்றி கேட்டேன்? ''ஓடத்தான் வேண்டுமா?'' என்று கேட்டார். நான் அந்தத்துறையில் வைத்தியம் செய்தவன் என்ற முறையில் நீங்கள் ஓடுவதை நான் விரும்பவில்லையென்றும், அவர் காலுக்கு அது கூடாதென்றும் கூறினேன். என்னைக் கட்டிப்பிடித்து கொஞ்சி விடைதரும்போது, மேடையில் ஒரு பாட்டுப் பாடும்படி கேட்டார். நான் பாடினேன் அன்பாக, அமைதியாக, மகிழ்ச்சியோடு விடைபெற்றேன் அவர் பெருந்தன்மையாக கட்டுப்பணத்தைத் திருப்பித் தந்ததை மறக்கமாட்டேன்.

—'பொபி' தர்மகுலசிங்கம்,
''வசந்த கிரி''
மயிலிட்டி

---

# தமிழ்வினாத்தாளில் ஒரு மயக்கம்

மக்கள் கருத்து

கடந்த 30-12-1882 நடைபெற்ற க.பொ.த. (சாதாரண) தேர்வுத் தமிழ் வினாத்தாளில் 23-ம் இலக்க வினாவும் விடையும் பின்வருமாறு அமைந்துள்ளன.

எச்சமாகவும் முற்றாகவும் வழங்கும் ஒரு சொல்.

(1) வந்தான் (2) உண்ட (3) காய்க்கும் (4) இலை

இதற்குரிய விடைகளில் 'உண்ட', 'காய்க்கும்' என்னும் இரு விடைகளும் சரியானவை. இரண்டும் பெயரெச்சங்களாகவும் வினை முற்றுக்களாகவும் வருவனவே.

'உண்ட' என்பது, 'உண்ட உணவு' எனப் பெயரெச்சமாகவும், 'குதிரைகள் புல்லை உண்ட' என அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைத் தெரிநிலைவினை முற்றாகவும் வரும். 'உண்ட' என்னும் வினைமுற்றில் உண்-பகுதி. 'ட்'-இறந்த கால இடைநிலை; 'அ' பலவின்பால் விகுதி, இவ்வினைமுற்று உண்+ட்+அன்+அ= உண்டன' என அன் சாரியை பெற்றும் வரும். அஃது இங்கே 'அன்' சாரியை பெறாமல் 'உண்ட' என வந்தது (இதனை, ''கோளரி இரண்டு……………குரம்பறு பிணம்படக் கொன்ற'' என்னும் கம்பராமாயணப் பாடற் பகுதியில் வந்த 'கொன்ற' என்னும் வினை முற்றாலும் மாணவர் உணர்வர்.

'காய்க்கும்' என்னும் சொல்லும், 'காய்க்கும் மரம்' எனப் பெயரெச்சமாகவும், 'மரம் காய்க்கும்' என வினைமுற்றாகவும் வரும். எனவே உண்ட, காய்க்கும் என்னும் இரண்டு சொற்களும் எச்சமும் முற்றுமாக வரும் என்பது வெள்ளிடைமலை.

இதனை விடைத்தாள் திருத்தத்துக்கான ஆலோசனையை வழங்கும் அதிகாரியவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும்''

இ. செல்லத்துரை.
''வாணியகம்'',
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

## மக்கள் கருத்து

---

# பாராட்டப்படவேண்டிய பஸ்நடத்துநர்

பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்கள் அதன் நேர ஒழுங்கீனம், பிரயாணிகள், நடத்துனர் (கண்டாக்டர்) ஆகியோரின் கெடுபிடிகளால் மிகவும் அவதிப்படும் இக்காலத்தில் நடத்துனர் ஒருவர் பிரயாணிகளால் மட்டுமன்றி நம்நாட்டில் உள்ள அனைவரும்பாராட்டிக்கௌரவிக்கும் தகுதி உடையவராக இருக்கிறார்.

30ம் திகதி வியாழன் காலை எனது மனைவியும் மகளும் எமது ஊராகிய கப்புதுவிலிருந்து பருத்தித்துறைக்குச்சென்றார்கள், அவர்கள் இறங்க வேண்டிய இடமாகிய பருத்தித்துறை சிவன்கோவிலடியில் இறங்கி அரை மணிநேரங் கழித்தே தமதுபெருந்தொகையானபணம் சிலபிரதானமான நிசிற்றுகள் குடை ஆகியனவற்றை பஸ்ஸிலேயே விட்டுவிட்டுத்தாம் இறங்கியதை உணர்ந்தனர். உடனே என் மனைவியும் மகளும் பதட்டத்துடன் தாம் வந்த பஸ் நடத்துனரை தேட முயற்சித்திருக்கிறார்கள். ஆனால் பஸ்ஸில பணத்தையும் குடை நிசிற் என்பனவைகளையும் கண்டெடுத்த பஸ்நடத்துனரான திரு. கதிரவேலு என்பவர் இவர்களைகண்டு அப்பொருட்களை இவர்களிடம் ஒப்படைக்க பெரு முயற்சி எடுத்திருக்கின்றார்.

திரு கதிரவேலுதன் கடமையை [illegible] இடையில நிறுத்தி விட்டு தன்கடமையே தி கடமை பாற்றும் எ[illegible] உறவினருடன்

5-ம் பக்கம் பார்க்க

# அமெரிக்க சுவாமியும் சிஷ்யர்களும் வந்துசேர்ந்தனர்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவில் உள்ள சைவசித்தாந்த திருச்சபையின் தலைவர் ஸ்ரீசிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் யாழ் புகையிரதநிலயத்தில் வந்தடைந்தபோது இந்து மதப் பெரியார்களாலும் பொதுமக்களாலும் இந்துசமயகலாசார முறைப்படி வரவேற்பளிக்கப் பட்டார். ஸ்ரீசுப்பிரமுனிய சுவாமிகள் நேற்று முன்தினம் நண்பகல் 1மணியளவில் யாழ் புகையிரத நிலயத்தில் 40 சிஷ்யர்களுடன் வந்திறங்கினார்.

நெற்றியில் சிவசின்னங்களான விபூதியாலான மூன்று குறிகளும் அதன்கீழ் சந்தனப் பொட்டும் தரித்த தலைவாரிமுடிக்கப்பட்ட குடுமியும் வெண்தாடியும், கழுத்தில் உருத்திராக்கம் மாலையும், காவிடபோர்வை வஸ்திரமும் உடுத்து தெய்வீக ஒளியுடன் சுவாமிகள் காட்சியளித்தார்.

சுவாமிகள் பின்னர் தமது குருநாதரான யோகர் சுவாமிகள் ஆசிரமத்துக்கு சென்று வழிபட்டார்.

நேற்று சுவாமிகளின் ஆசிரமமான அளவெட்டி சிவலிங்க ஆலய வளவில் சுவாமிகளின் 56வது ஜயந்திவிழா சிறப்பாகக்கொண்டாடப்பட்டது

சுவாமிகளின் வருகையை யொட்டி மில்க்வைற் தொழில் ஸ்தாபனத்தினர் 24 சிவசின்னங்கள் பொறிக்கப்பட்ட பிரசுரம் ஒன்றை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். (மா)

## லயன்ஸ்கழக சர்வதேசப் பணிப்பாளர்

[யாழ்ப்பாணம்]

லயன்ஸ் கழக யாழ். மாவட்ட முன்னாள் கவர்னர் லயன் விஜயநாதன் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் சர்வதேசப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நியமனத்தைப் பாராட்டி, யாழ். லயன்ஸ் கழகம் இம்மாதம் 8ம் திகதி பிற்பகல் 4-30க்கு, யாழ். மாநகர மண்டபத்தில் வரவேற்பளிக்கவுள்ளது.

இந்த வரவேற்பு விழாவில் வைத்து, லயன்ஸ் கழகத்தினர் யாழ். பொதுசன நூலக சிறுவர் பகுதிக்கு ஆரம்ப அன்பளிப்புகள் வழங்கவுள்ளனர்.

[மா]

# குருபக்தியில் திளைத்தவர் சுவாமிவிவேகானந்தர்

"சமயம் என்பது வெறும் வாய்ப்பேச்சல்ல அநுபூதியே சமயம்" என்பதை தமது வாழ்வின் மூலம் நமக்கு எடுத்துக்காட்டிய உன்னத இந்து சமயத்துறவியே சுவாமி விவேகானந்தர். ஸ்ரீராமகிருஷ்ணரின் 12 ஆண்டு காலம் அவர் பெற்ற சாதனைகளின் பேற்றை உலகறியச்செய்தவர் சுவாமி விவேகானந்தர். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் கல்வியறிவு பெருதவர். சுவாமி விவேகானந்தர் ஒரு பட்டதாரி. ஸ்ரீராமகிருஷ்ணர் அமைதியே வடிவெடுத்தவர் பிரசங்கமே செய்யாதவர் அவர் நாடுவிட்டு நாடுசெல்லவில்லை ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணரின் திவ்ய பொக்கிஷங்களை உலகனைத்தும் பரப்பவந்த நவீன துறவி சுவாமி விவேகானந்தர்.

சுவாமி விவேகானந்தரிடம் இளமையிலேயே இரக்கமும் வீரமும் இயல்பாக அமைந்த குணங்களாகும். சிறுபிராயத்தில் இவருடைய குறும்புகளைத் தாங்காது இவரை அறையில் பூட்டி வைத்துப்பார்த்தார்கள். அப்பொழுதும் அவ் அறையின் ஜன்னல் வழியாக தெருவில் சென்ற ஏழைமக்களுக்கு அவ் அறையில் உள்ள பொருட்களை எடுத்துக்கொடுத்தார்.

சிறு வயதில் ஒரு விளையாட்டுக் கழகத்துக்கு தலைவராக இருந்தார் அப்பொழுது இவர்களுக்கு உதவி செய்ய வந்த ஒரு ஆங்கில சிப்பாய்க்கு காயம் ஏற்படவே மற்றவர்கள் ஓடிவிட்டார்கள். சுவாமி விவேகானந்தர் தன் உடையிலிருந்து ஒரு துண்டைக்கிழித்து முதலுதவி அளித்து பிறகு ஒரு வைத்தியசாலைசேர்க்க உதவிபுரிந்தார்.

சுவாமி விவேகானந்தரிடம் இன்னும் ஒரு குண விசேஷம் என்னவென்றால், எதையும் சிந்திக்காமல் ஏற்றுக்கொள்ள மாட்டார். ஸ்ரீராமகிருஷ்ணரிடத்தில் வந்த பல சீடர்களுள் இவர் முதன்மை பெறுகிறார்: ஆகையால்தான் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் தலைவராக இவர் பின்பு திகழ வேண்டிவந்தது.

அன்றும் இன்றும் சரி குருபக்தியை என்றும் போற்றி வாழ்ந்த சீடர்களில் சுவாமி விவேகானந்தர் முதன்மை பெறுகிறார். அமெரிக்காவில் புகழ் ஏணியில் இருந்த பொழுது கூட அவரது குருபக்தியை ஒவ்வொரு சொற்பொழிவிலும் பார்க்கலாம்.

சுவாமிசித்ரூபானந்தா
ஸ்ரீராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரமம்

# விஞேபாஜி ஓர் அவதார புருஷர்

பாரொடுவிண்ணுப்பரந்த பரம்பொருளான எல்லாம் வல்ல இறைவன் பண்டுதொட்டு இன்றுமட்டும் பல பிறவிகள் எடுத்து மனித இடரைத் தீர்த்திருக்கின்ருர்.

இறையருளால் மனிதப் பிறவி எடுத்த பெருமக்களின் செயல்களில், நோக்கங்களில், இறைவனுடைய தன்மையை "பால் நினைந்தூட்டும் தாயினும் சிறந்த" தியாகத்தைக் கண்டிருக்கிருேம்.

## காந்திஜீயின் சீடர்கள்

ஆறிரு தடந்தோள் வள்ளலின் முகங்கள் போல ஆறு பெரியோர்கள் மகாத்மாகாந்திக்கு உத்தம சீடர்களாக தியாக சொரூபிகளாக இருந்தனர். காந்தியின் அகிம்சா முகம் முதல் முகமாகவும், நேருஜியின் தியாக முகம் இரண்டாம்முகமாகவும், வல்லபாய் படேலின் பரிபானமுகம் மூன்ரும் முகமாகவும் இரஜாஜியின் ஞான, சட்டமுகம் ஐந்தாம் முகமாகவும், விஞேபாஜியின் தெய்வீகமுகம் ஆறும் முகமாகவும் பிரகாசித்தன. இந்த அறுவரும் செய்த அரிய தொண்டு அளம்பரியது. அதை முன்னின்று ஆசாளுக நடத்தியவர் மகாத்மா காந்தி.

விஞேபாஜியின் தொண்டினுல் ஏழைமக்களின் நிலைஉயர்ந்தது. அவர்களின் துன்பங்களை நிலச் சுவான்களுக்கும் விளக்கினுர். நிலம்படைத்தோரின் கல்நெஞ்சைக் கனியவைத்தார். ஏழைகளின் பேரில் இரங்கியநிலச்சுவான்கள் காணிகளை அன்பளிப்பாகக்கொடுத்தார்கள். இந்தியக் கிராமங்கள் தோறும் நடந்துநடந்து நேரில் அவர்களின் கஷ்டங்களை அறிந்த பெரிய புண்ணியம் விஞேபாஜியைச் சாரும்.

கைத்தறி நெசவு, சிறுவர் கல்வி, குடிசைக்கைத்தொழில் சமயவளர்ச்சி, பண்பு, புகட்டல், இத்தனையையும் அபிவிருத்தி செய்வதற்காக, விஞேபா ஜி சர்வோதயத்தைத் தொடக்கிஞர்.

## க. இரத்தினவேல்

சுழிபுரம்

இப்பெரு முயற்சியினுல், இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் சர்வோதயம் ஓங்கிவளர்கிறது. கவனிப்பாரற்று சீர்கெட்டிருந்த சிறுவர்களை மேற்பார்வை செய்து சீர்படுத்துவதற்கு சர்வோதய பணியாளர்கள் பொறுப்பேற்ருர்கள். சர்வோதய சங்கங்கள், கிளைப் பணிப்பாளர்கள், தலைவர்கள், பல பணிகளை மேற்கொண்டு வெற்றிகண்டார்கள். தொழிற் கல்வியைப் பரப்புவதிலும். சர்வோதயம் பெருந்தொண்டு ஆற்றியிருக்கின்றது. தகுதியுடையவர்கள் தொழில்வாய்ப்பும் பெற்றிருக்கிறுர்கள்,

சத்தியம், அகிம்சை, ஞானம் கல்வி இவைகளைப் போதிக்க நூல்கள் பலவற்றை விஞேபாஜி வெளியிட்டார். அவர் எழுதிய பகவத்கீதை உரையும் விளக்கமும் மிகவும் அற்புதமானவை. சிந்தையை ஈர்த்து பரமானந்தத்தைத் தரக்கூடியவை. சாதனையிலும் விஞேபாஜி மிக மிக மேம்பட்டவர். யோகர் சுவாமியைப் போல் பரமகம்சரைப்போல, விவேகாநந்தர் போல தியானத்தில் இடையருது ஈடுபட்டவர்.

அவரில் பல பெரியோர்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். காந்தி, நேரு, இந்திராகாந்தி, ஜெயப்பிரகாஷ் இலங்கையைச்சேர்ந்த சர்வோதயத்தலைவர் ஆரியரட்ணு ஹன்டிப் பேரின்பநாயகம இப்படியான சற்சங்கத்தினர் பலர் விஞேபாஜியைப் பின்பற்றினர். விஞேபாஜியின் ஆசியுடன் அவரின் போதனை பரப்புவதற்காக வடஇந்தியாவிலிருந்து கால் நடையாக இலங்கையில் பலபாகங்களிலும் நடந்து சர்வோதயத்தைப் பரப்பிய இந்திய சர்வோதய சகோதரிகளின் சேவை இன்று எம் மனக்கண்முன் நிற்கின்றது.

தெய்வ நெறியாளராகப் பிறந்து, ஏழைகளுக்காகப் பிரார்த்தித்து, ஏழைகளுக்கு தன்னுல் இயன்ற சேவை செய்து, மக்களாற்போற்றப்பட்ட மகாத்மா, விஞேபாஜி அவர்களின் அடிச்சுவட்டைபின் பற்றி நாம் எம்மால் இயன்ற தொண்டைச் செய்வோமாக.

## பாராட்டப்பட.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புகொண்டு எமது ஊருக்கே வந்து பொருட்களை ஒப்படைக்க முயன்றபோது எனது மனைவியும் அவரைத் தேடிச்சென்று விசாரித்திருக்கிருர். உடனே என் மனைவியிடம் பொருட்களை ஒப்படைத்த நடத்துனரான திரு. கதிரவேலு அவைகள் எல்லாம் சரியாக உள்ளனவா என்று சரிபார்க்கச் சொல்லியிருக்கிருர் எல்லாம் சரியாக இருப்பதைக்கண்ட மனைவி மகிழ்ச்சியடைந்து அவருக்கு சந்தோஷமாக ஒரு தொகை பணத்தை அவருக்கு கொடுக்க எவ்வளவோ முயன்றும் அவர்கண்டிப்பாகவே மறுத்திருக்கிருர்.

ஒரு சிறு தொகையைக்கூட ஏற்க மறுத்த திரு. கதிரவேலு தில்லையம்பலப்பிள்ளையாருக்கு தேங்காய் உடைத்து, கற்பூரம் கொளுத்தும்படி சொல்லி அனுப்பியிருக்கிருர் இப்படியாக அருள்மனம் படைத்த திரு. கதிரவேலுவின் செயல் பாராட்டப்படவேண்டியதுடன், எமது வாழ்த்துக்களும் அவருக்கு உரியனவாகும.

வே. சம்புநாதன்
கபபுதூ,
கரவெட்டி.

## குறைந்த விலையில் விதை வெங்காயம்

[யாழ்ப்பாணம்]

வெங்காய உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு விதை வெங்காயத்தை மிகக் குறைந்த விலையில் கொடுத்துதவுவதற்கு யாழ்ப்பாணத்தில் விற்பனைத் நிலைக்களம் ஏற்பாடு செய்துள்ளதென விற்பனை திணைக்கள பிரதி ஆணையாளர் அறிவித்துள்ளார். விபரங்கட்கு விற்பனைத் திணைக்களத்துடன் கமக்காரர்கள் தொடர்பு கொள்ளலாம்.

## "முதியோருக்கு தனிவார்ட் அவசியம்"

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலையில் முதியோர்களுக்கென தனியானதோர் வார்ட்டை ஏற்படுத்தித்தர வேண்டும்,

இவ்வாறு யாழ். அரச அதிபரிடமும் யாழ். சமூக சேவை பகுதியினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

'தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரி முன்னர் காங்கேசன்துறையில் இயங்கிய சமயம் முதியோர்களுக்கென தனியானதோர் வார்ட் இருந்து வந்தது. அங்கு முதியோர்களை அனுமதித்து சிறப்பாக பராமரிக்கவும், சிறந்த சிகிச்சைகளை அளிக்கவும் வசதி இருந்தது ஆனால் தெல்லிப்பழைக்கு இந்த ஆஸ்பத்திரி மாற்றம் செய்யப்பட்டபின்னர் அந்த வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை வயோதிபர் ஆண்டு கொண்டாடப்படும் இச்சமயத்தில் தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலையில் முதியோருக்கென தனியான வார்ட் ஒன்றை ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டும்".

பழை-வீமனகாமம் கிராமோதயசபையின் ஆதரவில் இடம்பெற்ற முதியோர்தின விழாவில் கிராமோதயசபை உறுப்பினர் திரு. எஸ். ஆர் ஞானசுந்தரம் மேற்படி கோரிக்கையை விடுத்தார்.

யாழ் சமூகசேவை உத்தியோகத்தர் திரு க இராமநாதன் இதற்குப் பதிலளிக்கையில் யாழ் அரச அதிருடன் இதுபற்றி தொடர்பு கொள்ளுமாறும் தமே் முடிந்த உதவிகளை அளிப்பதாகவும் தெரிவித்தார்

## நடவடிக்கை

(மயிலிட்டி)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில்நிலவும்மூட்டைப் பூச்சிப் பிரச்சனையைத் தீர்க்கத் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சங்கத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது சுகாதார திணைக்களத்திற்கு இதுபற்றி பலமுறை முறையிடப்பட்டது அண்மைக்காலமாக இமூட்டைப் பூச்சிகளின் தொல்லைகள் அதிகரித்து வந்தன.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானமொன்றை நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர் கொண்டுவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது

## 21 குடும்பங்களுக்கு கடன் வசதி

(புலோலி)

அல்வாய் மேற்கு கிராமத்தைச் சேர்ந்த 21 குடும்பங்கள் வீட்டுத் தோட்டம் கால் நடைவளர்ப்பு, சிறுதொழில் முயற்சிகளுக்கென தலா 250 ரூபா வட்டியிலாக் கடனை பெற்றுள்ளன.

உலக விஷன் ஸ்தாபனத்தின் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரமேம்பாடு கருதி மேற்கொள்ளப்பட்டுவரும்திட்டத்திற்கமைய இப்பணத்தினை அல்வாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் உலக விஷன் ஸ்தாபனம் வழங்கியிருந்தது.

கிராம அபிவிருத்திச் சங்கம் அப்பகுதிகளில்உள்ள 21 குடும்பங்களுக்கும் தலா 250 ரூபா வீதம் வீட்டுத் தோட்டச் செய்கை, கால்நடைவளர்ப்பு சிறுகைத்தொழில் முயற்சிகளுக்கான அறுமாதத்தில் வட்டியின்றி செலுத்தப்படவேண்டிய இக்கடனை வழங்கியுள்ளது.

## விமர்சனம்

நூல்: மகாகவி பாரதி, நூலாசிரியர்: எஸ். திருச்செல்வம், வெளியீடு: கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள்.

ஒரு சிறிய கண்ணுடி பெரிய மலையையும் காட்டுவதுபோல மகாகவி பாரதி என்ற இச்சிறு நூல் பாரதி என்ற மலையை மிகத்தெளிவாகக் காட்டுகின்றது. பாரதியின் வரலாற்றையும் அவரது இரசனையையும் கவித்துவத்தையும் விளக்கும் இந்நூலின் ஆசிரியர் எஸ். திருச்செல்வம் அவர்கள்.

திருச்செல்வம் துடிப்பும் ஆர்வமும் மிக்க இளைஞர். கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் கழகத்தின் மூலம் பாரதி நூற்ருண்டுவிழாக் காலத்தில் இலங்கையிலிருந்து மகாகவி பாரதி பற்றி ஒரு நூலாவது வெளிவரவில்லையே என்ற குறையை நீக்கியுள்ளார். இந் நூலுக்கு முன்னுரை வழங்கிய பண்டிதமணி அவர்கள் "பாரதி பாடலில் அபிமானங்கொண்டவர்கள் கைகளில் இந்நூல் இருக்கவேண்டியது. பள்ளி மாணவர்கள் ஊன்றிப் படிக்கவேண்டிய நூல் என்பதிற் சந்தேகம் இல்லை" என்று குறிட பிட்டுள்ளார்.

பாரதியின்வரலாற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறும் இந்நூல் பாரதியாரது ஆற்றலைக் குறிப்பிடும்போது "பாரதியாலர மாபெருங் கவிஞர் என்று மட்டுமே மக்கள் அறிவர். அவர் ஒரு சிறந்த கதாசிரியர், கட்டுரையாசிரியர், மேடைப் பேச்சாளர் என்பது பலருக்குத் தெரியாது. அவர் ஒருசிறந்ததேசியக் கவிஞராக மிளிர்ந்தபோதும் தமிழுக்குச் செய்த தொண்டு மகத்தானது. பாரதியாரின் கவிதைநடைப் புதுமையை அவரது வசனநடையிலும் காணலாம். படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் உணர்ச்சியையும்புத்துணர்வையு அது ஏற்படுத்தும். தமிழ் மொழியில் அவருக்கு இருந்த கற்பனைத் திறனும் சிந்தனைத் திறனும் சிரஞ்சீவித்தன்மை தன்மை வாய்ந்தவை" என்று குறிப்பிடப்பட்டுளது பாரதி பற்றிய முழு அம்சங்களையும் சுருக்கமாகத் தன்னகத்தே கொண்ட இந்நூல் பலர்க்கும் பயன்படும் ஒன்ருகும்.

—'முரளி'

மாவட்ட சபைக்கு

# "பூரண அதிகாரம் கிடைத்தால்

## தமிழர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு"

[கிளிநொச்சி]

கிளிநொச்சி தொகுதியை அபிவிருத்தி செய்வதற்கான சகல முயற்சியும் மேற்கொண்டுள்ளேன். இதற்காக பல முறை ஜனாதிபதியுடனும் அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியும் இருக்கிறேன்.

கிளிநொச்சி தொகுதி ஐ. தே. கட்சி அமைப்பாளர் திரு. நாயகம் சிற்றம்பலம் பூநகரி நல்லூரில் ஐ. தே. க. கிளை ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மகளிர் குழுத் தலைவி செல்வி கந்தையா சிவமலர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நாயகம் சிற்றம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இந்தியாவில் மகாத்மா காந்தி போன்றோர் விடுதலைக்காகப் போராடியபோது குறுகி சாதி, வகுப்புவாத கண்ணோட்டத்துடன் அப்போராட்டத்தை முன் எடுத்து செல்லவில்லை. தேசியக் கண்ணோட்டத்துடன் நோக்கி சகலமக்களையும் ஒன்றிணைத்தார். இந்நிலைமை நமது நாட்டில் உருவாகவேண்டும். முதலில் நமது நாடு தேசிய ரீதியில் பொருளாதார அபிவிருத்தி சுதந்திரம் காணவேண்டும். இதற்கெனத்தான் நமது ஜனாதிபதி மாவட்டசபை அமைப்பு முறையை இங்கு அறிமுகம் செய்தார். மாவட்டசபைக்கு பூரண அதிகாரம் வரும்போது தமிழ் மக்களின் பிரச்னைக்கும் ஒரு நிரந்தர தீர்வு ஏற்பட்டுவிடும்.

அரசில் நாம் அங்கம் வகிதாலும் நாமும் மக்கள் தான் என்பதையும் தமிழ் உணர்வு நிறைந்தவர்கள் என்பதையும் யாரும் மறந்து விடக்கூடாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் ஈழவிடுதலை அணி போன்ற இயக்கங்களும் தமிழர் உரிமைபெற ஒரு கோணத்தில் போராடும்போது ஐ. தே. கட்சியினராகிய நாம் அரசிடம் இணைந்து எமது உரிமைக்காக குரல் எழுப்புகிறோம். எமது பகுதியின் அபிவிருத்திக்காக அரசுடன் இணைந்து பாடுபடுகிறோம், வடபகுதியை எடுத்துக்கொண்டால் இங்குள்ள எல்லா தொகுதிகளையும் விட கிளிநொச்சி தொகுதி அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

இங்கு ஆசிரியர்பற்றாக்குறை பாரிய பிரச்னையாக உள்ளது. தற்காலிக ஆசிரியர்களை நிரந்தரமாக்குமாறும் நான் அரசை கோரியும் உள்ளேன்.

திரு நா. தம்பையா, திரு பொ. அமிர்தலிங்கம், செல்வி நாகரெத்தினம் சிதம்பரம், திரு. ஆ. பத்மநாதன் உட்பட பலர் உரையாற்றினார்கள். [ஈ]

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 21ந் திகதி
வியாழக்கிழமை
[6—1—83]

மேடம்: சிறுபிணி வாட்டும் ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம் வாழ்க்கை இன்று சுமையாகத் தோன்றக்கூடும் சுமாரான தினம்.

இடபம்: நீண்டநாள் கனவு இன்று நனவாகும் தொழில் வேட்டையில் வெற்றி கிடைக்கலாம் அரசாங்க ஊழியராயின் பதவி உயர்வுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மிதுனம்: உற்சாகமான தினம் உறவினர்கள் பச்சைக் கொடி காட்டுவார்கள் புதிய தொழில்களில் மனதைச் செலுத்துவீர்கள் இடமாற்றமொன்றுக்கு முயற்சி மேற்கொள்ளப்படலாம்.

கடகம்: நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு எதிர்த்தவர்களே உங்களைப் பாராட்டச் செய்வார்கள். பணவிவகாரத்தில் நல்ல திருப்பம் ஏற்படும். நல்ல தினம் இன்று.

சிங்கம்; மனதில் விரக்தி நிலை தென்படும் உடல்நலமும் பாதிக்கப்படலாம் கால்நடைகளினால் நஷ்டம் ஏற்படும் பூமிப் பிணக்குகள்மூலம் வழக்கு விவகாரங்கள் ஏற்படலாம்.

கன்னி: ஏமாற்று வேலைகள் இடம்பெறும் வியாபாரிகள் புதிய முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும் குடும்பத்தில் அமைதி குன்றும். நன்றாக ஆலோசித்த பின்பே நடவடிக்கையும் எடுக்கவும்.

துலாம்; பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. கொடுக்கல் வாங்கல்மூலம் அதிக ஆதாயத்திற்கு இடமுண்டு வசீகரப் பேச்சின் காரணமாக எதிரிகளையும் உங்கள் வசப்படுத்துவீர்கள்.

விருட்சம்: தூக்கம் விழிகளைத் தழுவும் கடந்தகால எண்ணங்கள் அலைமோதும் அடுத்துக் கெடுப்பதற்கு சிலர் முனைவார். சகோதர வழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு.

தனு: வாகனச் சாரதிகளுக்கு சிறப்பான நாள். வரவிலும் திருப்தி காணப்படுகின்றது தாய்வழிமூலம் சிலருக்கு தனலாபம் கிடைக்கும் அறிஞர்களின் தொடர்புகளுக்கும் இடமேற்படும்.

மகரம்: வாழ்க்கையில் புதிய பாதையை உருவாக்குவீர்கள் உங்கள் அறிவுரைகளைக் கேட்பதற்கு மற்றவர்கள் தயாராக இருப்பார்கள். பரோபகாரசித்தை மேலிடும்.

கும்பம்: பிரிவின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள். தற்பெருமைக்காகத் தவறான பாதையில் காலடி எடுத்து வைக்க நேரிடலாம். தொழில் துறையில் தயக்கநிலை தென்படும்.

மீனம்:— மனம் நிறைந்த வாழ்வு மக்களால் மகிழ்ச்சி இவற்றுடன் கண்ணியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். உறவினர்கள் உதவிக்கு ஓடி வருவர் செல்வாக்குப் பெருகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

"யாழ். மாவட்டத்தில்

# குற்றச்செயல்களை தடுக்க

## பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு"

### யாழ். பொலிஸ் அதிபர் பாராட்டு

(புலோலி

பொதுமக்களின் ஒத்துழைப்பின்றி பொலிசாரினால் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. மக்கள் பாதுகாப்புடன் சமாதானமாக வாழ்வதற்கு மக்களின் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதே பொலிசாரின் கடமையாகும். யாழ். மாவட்டத்தில் தற்போது குற்றச்செயல்களைத் தடுக்கப் பொதுமக்கள் பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்கிவருவது மகிழ்ச்சிக்குரியது.

இவ்வாறு பருத்தித்துறை பொலிஸ் பொதுமக்கள் நட்புறவுக்குழுப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய யாழ். பொலிஸ் அதிபர் திரு. ஆர். ஈ. ஆனந்தராசா குறிப்பிட்டார். பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் பருத்தித்துறை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு. ஈ, கே. ஆர். விஜயவர்த்தன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய பொலிஸ் அதிபர் திரு. ஆனந்தராசா குறிப்பிட்டதாவது:—

முன்பு பொதுமக்கள்பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்கிவந்தமையால் மக்கள் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ வழிவகுக்கப்பட்டது. ஆனால் அண்மைக்காலங்களில் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையேயான தொடர்பு குறைந்தமையால் இருதரப்பினருக்கு மிடையே பரஸ்பர நல்லெண்ணம் ஒருவரைஒருவர் விளங்கிக்கொள்ளுதல் என்பன குன்றின

இப்போது பொலிசாருக்கும் பொதுமக்களுக்கு மிடையேயான தொடர்பு நெருக்கமாக ஏற்பட்டுவருவதனால் மக்கள் போதிய நன்மைகளை பெற்றுக் கொள்ளவாய்ப்பேற்படுகிறது. பொலிசாருக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்கிவருவதனால் அண்மையில் 30 குற்றச் செயல்களைப் புரிந்தவர்களை யாழ். மாவட்டத்தில் கைது செய்யக்கூடியதாக இருந்தது, பருத்தித்துறைபலநோக்குகூட்டுறவு சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் நடைபெற்ற கொள்ளையில்கொள்ளையர்களை கைது செய்வதற்குப் பொது மக்கள் பொலிசாருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

பொது மக்களின்ஒத்துழைப்பின்றிப் பொலிசாரினால் எதுவும் செய்யமுடியாது மக்கள் பயமின்றி பாதுகாப்படன் சமாதானமாக வாழ்வதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதே பொலிசாரின் கடமையாகும். சுமார் 10, 15 வருடங்களுக்கு முன்னர் நான் இங்கு மாணவனாக இருந்த காலத்தில் இப்பகுதி மக்கள் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும், சமாதானத்தையும் விரும்பும் மக்களாக மிகச் சிறப்பாக வாழ்ந்து வந்ததை நான் கண்டிருக்கிறேன்

பொலிஸ் நிலையங்களில் பொலிசார் பற்றாக்குறையாக இருப்பதனால் ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் 25 ரிசேவ் பொலிசாருக்கு பயிற்சியளித்து வைத்திருப்பதற்கு நான் சிபார்சு செய்துள்ளேன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் மக்களுக்கு நன்மை கிடைக்கும்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு. விஜயவர்த்தன தலைமையுரையில் குறிப்பிட்டதாவது.

நாட்டில் குற்றச் செயல்கள் ஒழித்துக்கட்டப்பட வேண்டும். குற்றச்செயல்களை ஒழித்துக்கட்டுவதற்குப் பொலிசாருக்குப் பொதுமக்கள் போதிய ஒத்துழைப்பு வழங்கவேண்டும். பொதுமக்களின் பாதுகாவலர்கள்தான் பொலிசார் என்பதைப் பொதுமக்கள் விளங்கி அவர்கள் மேல் நம்பிக்கைவைத்து ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

யாழ். உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு. ரி. மார்க்கண்டு யாழ். பிரதம கல்வியதிகாரி திரு. வெ. சபாநாயகம் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் திரு. வி. கே. கணேசலிங்கம். பருத்தித்துறை வர்த்தகர் சங்க தலைவர் திரு. மு. பொ. வீரவாகு ஆகியோரும் கருத்துரைகள் வழங்கினார்கள். (ஈ)

காங்கேசன்துறை

# செல்லப்பிள்ளையார் கோயில் வழக்கில் எதிரிகள் விடுதலை!

(மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை யாத்திரைச் செல்லப்பிள்ளையார் கோவில் வழக்கில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படுத்தியது தொடர்பான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமையால் எதிரிகள் 6 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை யாத்திரைச் செல்லப்பிள்ளையார் கோவில் பூசகராக விருந்த தியாகராஜக்குருக்கள் சபேச சர்மா என்பவர் மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மேற்படி வழக்கில் நா. நடராசா, ஐ. வைத்தியநாதக்குருக்கள், வை சுப்பிரமணியசர்மா, செ. கணபதிப்பிள்ளை, ஆ. விநாயகமூர்த்தி, டாக்டர். இராஜேந்திரா ஆகியோர் மீது மேற்படி கோவிலில் அத்துமீறி பிரவேசித்து தகாதவார்த்தைகளால் ஏசி, தம்மீது பலாத்காரம்பிரயோகித்து கோவில் திறப்புக்களை அபகரித்தாக குற்றம் சுமத்தியிருந்ததுடன் தொடர்ந்தும் கோவிலின் ஆட்சியில் தம்மை நியதுக்குமாறும்கோரியிருந்தார்.

மல்லாகம் ஆரம்பநீதிமன்ற நீதிபதி திரு. கே. கணபதிப்பிள்ளை முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கெடுக்கப் பட்டசமயம் மனுதார் சாட்சியமளித்தார் இவரை எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே செல்வரத்தினம 3 தினங்கள குறுக்கு விசாரணை செய்தார்.

சாட்சியத்தில முரண்பாடுகள் இருப்பதையும் சாட்சியத்திற்கும் சத்தியக் கூற்றுக்குமிடையில் குழறுபடிகள் இருப்பதையும் சட்டத்தரணி ஆர், ஜே. செல்வரத்தினம் சுட்டிக்காட்டி விசாரணை நடுவிலேயே வழக்கை தள்ளுபடி செய்யுமாறு நீதிபதியிடம் கோரினார்.

நீதிபதி திரு. கே. கணபதிப்பிள்ளை வழக்கு விசாரணையை இடைநிறுத்தி வழக்கை தள்ளுபடி செய்து எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் கூறியதாவது;

சமாதானக் குலைவு ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தது பற்றி சாட்சியத்தில் உறுதிப்படுத்தப்படவில்லை. இரவு 11 மணிக்கு சம்பவம் நடந்ததாக தெரிவிக்கப்பட்ட அதே நேரத்தில் 9–50மணிக்கு பொலிசில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. இதனை நம்ப முடியாமல் இருக்கிறது சாட்சியத்திற்கும் சத்தியக்கூற்றுக்கும் முரண்பாடுகள் உள்ளன. மனுதாரின் சாட்சியத்தை நமபமுடியாதிருப்பதால் அதனை நிராகரிக்கவேண்டியுள்ளது. ஆதலால் வழக்கை தொடர்ந்து விசாரிப்பது அவசியமற்றதெனக்கருதிவழக்கை தள்ளுபடி செய்து எதிரிகளை விடுதலை செய்கிறேன்"

இவழக்கில் மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகள் எஸ். முத்துக்கிருஷ்ணன், மு. திருநாவுக்கரசு ஆகியோர் ஆஜராகினர்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், எஸ் தியாகேந்திரன், கே. விஜயேந்திரா ஆகியோர் ஆஜராகினர்.

## அபிவிருத்திகளை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

படியாக கிளிநொச்சி ஒரு பெரிய நகரமாக மாறும்.

இம்மன்றம் யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தியில் அக்கறை காட்டுவதோடு நின்றுவிடாது. வட-மகாணத்தின் அபிவிருத்தியிலும் பங்கு கொள்ளவேண்டும்.

சகல சேவைகளையும் திறம்பட செய்துமுடித்த இந்தமன்றத்தைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

கிளிநொச்சி எம். பி. திரு. வீ ஆனந்தசங்கரி பேசுகையில் கூறியதாவது:— ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இந்த நாட்டிற்குச் செய்த சிறந்த பணிகளில் ஒன்று நாடு பூராவும் தேசிய இளைஞர் சேவை மன்றங்களை நிறுவி அதன்மூலம் சகல பகுதிகளிலும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருவதேயாகும்.

இம்மன்றம் கிளிநொச்சித் தொகுதியில் அக்கராயன் குளம், வன்னேரிக் குளம், ஸ்கந்தபுரம், பூநகரி ஆகிய இடங்களில் பல அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துச் செய்துள்ளது இங்கு ஒரு புதிய முகாம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இத்தொகுதியின் ஏனைய பகுதிகளிலும் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கிறேன். (ஈ)

## புதிய பஸ் சேவை

(வவுனியா)

அச்சுவேலியிலிருந்து திருகோணமலைக்கு புதிய பஸ் சேவை ஒன்றை நடத்த திருகோணமலை டிப்போ முன்வந்துள்ளது.

தினமும் அதிகாலை 4–30 மணிக்கு அச்சுவேலியிலிருந்து இந்த பஸ் புறப்பட்டு நண்பகல் 12–30 மணிக்கு திருகோணமலையை சென்றடையும், பின் குறித்த பஸ் அங்கிருந்து பகல் ஒன்றரை மணிக்கு புறப்பட்டு அச்சுவேலியை இரவு 8–30 மணிக்கு வந்தடையும்.

(த)

## பாராட்டு விழா

(அரியாலை)

"கலா சூரிய" என்ற அரச கௌரவ விருதைப் பெற்ற திரு என் கே. பத்மநாதனைப் பாராட்டுமுகமாக புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவைச் சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையின் சார்பில் வரும் 16ந் திகதி பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாராட்டு விழாவிற்கு தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர் சிவதர்மவள்ளல் எஸ். இராசரத்தினம் தலைமை வகிப்பார்.

# உழுந்தின் உத்தரவாதவிலை அதிகரிக்கப்பட வேண்டும்

## வவனியா எம். பி. கோரிக்கை

(வவனியா)

உழுந்தின் உத்தரவாதவிலை அதிகரிக்கப்பட வேண்டும். நெல் சந்தைப்படுத்தும்கொள்வனவு நிலையங்களும் கமநல சேவை நிலையங்களும் உழுந்துகொள்வனவு செய்வதற்கு உழுந்து கொள்வனவாளர்களாக நியமிக்கப்பட வேண்டும்".

வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

அக்கோரிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

வவனியா மாவட்டத்தில் மாத்திரம் ஆறாயிரம் ஏக்கர் நிலத்தில் இவ்வாண்டு கால போகத்தில் உழுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டின்படி ஐயாயிரம்தொன்னிற்கு மேற்பட்ட உழுந்து அறுவடை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

1980ம் ஆண்டு ஒரு கிலோ உழுந்தின் உத்தரவாத விலையாக ரூபா நான்கு அங்கீகரிக்கப்பட்டு இன்று வரை நடைமுறையில் இருக்கின்றது.

தொழிலாளர் வேதன உயர்வு, எரிபொருள் விலை உயர்வு, கிருமிநாசினி விலை உயர்வு விவசாயிகள் வாழ்க்கைச் செலவு உயர்வு இவற்றின் காரணமாக ஒரு கிலோ உழுந்தின் உற்பத்திச் செலவு ரூபா ஆறிற்கு மேல் கூடி இருக்கிறது என்பதை வவனியா மாவட்ட விவசாயக்குழு ஆராய்ந்து உழுந்தின் உத்தரவாத விலை உயர்த்தப்பட வேண்டுமென சிபார்சு செய்திருக்கின்றது.

உழுந்து அறுவடை ஆரம்பமாகி விட்டது. ஆகவே உத்தரவாதவிலையை உயர்த்துவதுடன் விவசாயிகளிடம் இருந்து உழுந்தைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைக் காலதாமதமின்றி மேற்கொள்ளும்படி வேண்டுகிறேன்.


## பொலிகண்டி பாடசாலைக்கு புதியகட்டிடம்

(புலோலி)

பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கட்டிடப்பற்றுக்குறையை நீக்குவதற்காகப்புதிய கட்டிடமொன்று நிர்மாணிக்கப் படவுள்ளது.

இப்புதிய மாடிக்கட்டிட முதலாம் கட்ட நிர்மாண வேலைகளுக்குப் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து உடுப்பிட்டி எம் பி திரு, க. இராசலிங்கம் 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

## அமரர் யோகராசா



பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை போர்மன் அமரர் கார்த்திகேசு யோகராசாவின் ஓராண்டு நினைவு தினம் இன்றாகும்.

கொடிகாமம் காலஞ்சென்ற சட்டத்தரணி வி. எஸ் கார்த்திகேசுவின் புதல்வரான இவர் யாழ். மத்திய கல்லூரியில் பயின்றபின் சென்னை "ஒட்டோமோபைல் என்ஜினியரிங்" கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் 1956-ஆம் ஆண்டு போர்மனாகப் பதவி ஏற்று 25 வருட காலம் பணியாற்றினார். பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை பொழுது போக்குக் கழகத்தலைவராக இருந்து 'கிளப்' தினங்களை ஊழியரின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடத்தினார். தொழிற்சாலை ஊழியர் கலை, கலாச்சார மன்றத்தின் நாடகங்களிலும் நடித்துள்ளார். இவர் ஒரு மேடைப்பேச்சாளரும் எழுத்தாளருமாவார்.

தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்க நெறியாளர் குழு உறுப்பினராகவும், கொடிகாமம் சனசமூக நிலைய ஆரம்ப செயற்குழு உறுப்பினராகவும், கொடிகாமம் அபிவிருத்திசபை உறுப்பினராகவும் கடமையாற்றினார். கொடிகாமம் பத்திரகாளியம்மன் கோவில் பரிபாலகர்களில் ஒருவராகவும் பணியாற்றினார். பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை முன்னேற்றத்திற்காக இறுதி மூச்சு வரை உழைத்தார். அவர் ஆத்மா சாந்தியடைவதாக.

—ஓர் அன்பர்.

## பனை அபிவிருத்தி சபை நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

நாட்டின் பல பகுதிகளிலும் இயங்கும் பனம்பொருள் உற்பத்திப் பயிற்சி நிலையங்கள் தோறும் உற்பத்திக் கண்காட்சியையும் விற்பனையையும் நடத்த பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இம்மாதம் 25ம் திகதி இப்பயிற்சி நிலையங்கள் இயங்கும் பகுதிகளில் கண்காட்சியையும் விற்பனையையும் நடத்துமாறு பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவர் உத்தரவு பிறப்பித்துள்ளார். இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்று சகல போதனாசிரியர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மாதர் பணியகம், மாதர் சங்கம், கூட்டுறவு மாதர் இயக்கம் ஆகிய இயக்கங்களுடன் இணைந்து இக்கண்காட்சிகளையும்விற்பனையையும் நடத்துமாறு இதுதொடர்பான சுற்று நிருபம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வண். நிரு.)

## விசாரணை அறிக்கை பரிசீலனை

[கொழும்பு]

குருநகர் இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ள, இப்போது கொழும்பு மகசின் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள மதகுருமார், விரிவுரையாளர் தம்பதி, டாக்டர் ஆகியோர் சம்பந்தப்பட்டவர்கள் விசாரணைகள் குறித்த அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தில் இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திணைக்களத்தின் ஆலோசனைப்படி சம்பந்தப்பட்டோர் மீது எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது என்பது குறித்து அறிவிக்கப்படலாம் எனத் தெரிய வருகிறது.

## தெல்லிப்பழையில் இலக்கிய வட்டம்

(மயிலிட்டி)

தெல்லிப்பழையில் "வயல்" என்னும் பத்திரிகை இயக்கத்தின் ஆதரவில் இன்று மாலை 4 மணிக்கு திரு. ந. சபேசன் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள கல்வி நிலையத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் புதிய கலை இலக்கிய வட்ட நிர்வாகத் தெரிவும் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு என். சுப்பிரமணிய ஐயர் இதில் கலந்து கொள்வார்.

## நிறைவு விழா

[மன்னார்]

பேசாலை சென் பீற்றர்ஸ் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா ஜனவரி மாதம் 9ஆம் திகதி பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயமுன்றலில் நடைபெறும்.

இவ்வாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தற்போது ரகப்பந்தாட்டம், சைக்கிள் ஓட்டம், நீச்சல், வலைப்பந்தாட்டம், கயிறு இழுத்தல் போன்ற பல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறது.

## கொழும்பு - தூத்துக்குடி கப்பல்சேவை மார்ச்சில்!

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையில், வரும் மார்ச் மாதத்தில் கப்பல்சேவைஒன்று ஆரம்பமாக இருக்கிறது. லங்கா மரைன் என்ற இலங்கை கப்பல் நிறுவனமே இக்கப்பல் சேவையை நடாத்தவுள்ளது.

பிரயாணிகளுடன் 120 கார்களை எடுத்துச் செல்லக் கூடிய வசதி இக்கப்பலில் அமைந்துள்ளது.

இக்கப்பல் சேவைமூலம் இலங்கை-இந்தியாவுக்குமிடையிலான பிரயாண நெருக்கடியை ஓரளவு தீர்த்துக் கொள்ளலாமென நம்பப்படுகிறது. [இ]

## கிளிநொச்சியில் இலவச கண்சிகிச்சை முகாம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இலவச கண்சிகிச்சை முகாம் ஒன்றை நடத்துவதற்கு ஐகெயர் ஸ்ரீ லங்கா என்னும் நிறுவனம் முன்வந்துள்ளது.

இச் சிகிச்சை முகாமை நடத்துவதற்கென ஐகெயர் ஸ்ரீலங்கா நிறுவனத்தைச்சேர்ந்த கண் வைத்திய நிபுணர் குழுவொன்று விரைவில் கிளிநொச்சிக்கு வருகைதரவுள்ளது.

இக்குழுவில் நாற்பதுபேர் அடங்குவார்கள். இவர்களை இங்கு அழைத்து சிகிச்சைகளை மேற்கொள்வதற்கானஒழுங்குகளை பரந்தன் கிளிநொச்சி ரோட்டறிக்கழகம் செய்து வருவதாக பிரஸ்தாப கழகத்தின் செயலாளரும் சமூக சேவையாளருமான டாக்டர் ஸ்ரீதரன் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

கண்படலம் [கட்டறட்] நோயினாலும் ஏனைய கண் ரோகங்களிலும் கிளிநொச்சி தொகுதியில் ஆயிரக்கணக்கானோர் பாதிப்படைந்துள்ளதாகவும் இவர்களிற்கு தகுந்த சிகிச்சை அளிப்பதன் மூலம் நிவாரணம் காணமுடியும் எனவும் டாக்டர் ஸ்ரீதரன் மேலும் தெரிவித்தார்.

இம்முகாமைநடத்துவதற்கு முதற்படியாக இத்தொகுதியின் சகல கிராமங்களிலும் பொது சுகாதார அதிகாரிகள், ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள், அரசினர் ஆஸ்பத்திரி வைத்திய உத்தியோகஸ்தர்கள் உதவியுடன் ரோட்டறிக்கழக தொண்டர்கள் வீடு வீடாக சென்று ஆய்வு ஒன்றை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி.ஞாயிறு2-30
ஜெமினி-சாவித்திரி
கற்பகம்

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — விஜயா
திருடி

இன்னும் சில தினங்கள்
றீகல் [யாழ். நகர்]
நான் (ஈஸ்ட்மன் கலர்)
விரைவில்
எங்கவீட்டுப்பிள்ளை

மனோகரா
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி — அஞ்சலிதேவி
மாதர்குல மாணிக்கம்
(புதிய பிரதி)

சாந்தி யாழ். இன்று மட்டும்
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
NIGHT WING
IN THE DEAD OF NIGHT THEY COME...
SWIFT—SILENT—SAVAGE
An Action Thriller—Color

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
சவாலேசமாளி

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

வின்ஸர் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
காலை 10-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணிவரை ஆசனங்கள் முன்கூட்டியே பதிவுசெய்யலாம்.
காதல் என்பது தெய்வீகமானது. இந்த தெய்வீகத்தின் ஆலயமாக விளங்கும் வசந்த மாளிகையை இன்றே பாருங்கள். ரசிகப்பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி.
சிவாஜி வாணிஸ்ரீ
பாலாஜி, நாகேஷ்
நடித்த
"வசந்தமாளிகை"

# கூடுதல் விலைக்கு விற்கும் வியாபாரிகளின் கையிருப்பிலுள்ள சீனி பறிமுதலாகும்!

## விலையைக் குறைக்கவும் நடவடிக்கை

(இ. கந்தசாமி)

சீனி விலையைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதுடன், கூடுதல் விலைக்குச் சீனியை விற்கும் வியாபாரிகளின் கையிருப்பிலுள்ள சீனியை பறிமுதல் செய்வதென்றும் நேற்றுக்கூடிய அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன, சீனி விலை அதிகரித்திருப்பதால் உலக விலையுடன் ஒப்பிட்டு, விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தக அமைச்சரைக் கேட்டுள்ளார்.

கூட்டுறவுச் சங்கத்திலிருந்து சீனியைக் குறைந்த விலைக்கு வாங்கி வியாபாரிகள் கூடுதல் விலைக்கு விற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இன்னும் 6 நாட்களுக்குள் 12 ஆயிரம் தொன் சீனி கொழும்புத் துறைமுகத்திற்கு வந்து சேருமென அமைச்சர் ஹேரத் தெரிவித்தார். (க)

# மரண அறிவித்தல்

## கதிரிப்பிள்ளை அருணாசலம்

திரு. கதிரிப்பிள்ளை அருணாசலம் அவர்கள் (ஒய்வு பெற்ற வயவிளான் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்) 4-01-83ம் திகதியன்று காலமானார். இவர் ருகம அரசினர் ஆஸ்பத்திரி உதவி வைத்திய அதிகாரி திருமதி சத்தியராணி பாலசந்திரனது அன்புத் தந்தையார் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 6-01-83 வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு குரும்பசிட்டியில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். 5752

# மரண அறிவித்தல்

## பிரான்சிஸ் மாசிலாமணி

வடமாநிலக் கல்வித்திணைக்கள ஆங்கிலக் கல்வி ஆலோசகர் பி மாசிலாமணி காலமாகிவிட்டார். இவர் ரதியின் அன்புக்கணவரும், ரஜீவின் அருமைத் தந்தையும், யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி முன்னாள் ஆசிரியர் திரு பிரான்சிஸ், காலஞ்சென்ற திருமதி இராசம் பிரான்சிஸ் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முன்னைநாள் யாழ். பிரதம அஞ்சல் அதிபர் திரு A. E J பெனடிக்ற், திருமதி இராசேஸ்வரி பெனடிக்ற் ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் (இன்று) 6-1-83 வியாழக்கிழமை பி.ப. 3-30 மணியளவில் யாழ் கொன்சல்சி மாதா ஆலய சேமக்காலைக்கு யாழ் 14, புதுவீதி கொய்யாத் தோட்டத்திலிருந்து நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். 5746

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் இராசரத்தினம்

வசிரியைச் சேர்ந்த இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் ஆறுமுகம் இராசரத்தினம் சிவபதமானார். இவர் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், ராஜினி, ராஜ்குமார் (ஜெடா, ரஞ்சிற்குமார் (சாம்பியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், மாணிக்கம், பொன்னம்மா, தங்கம்மா, செல்லம்மா ஆகியோரின் சகோதரரும், வே. திருநாவுக்கரசு [பொறியியலாளர், நீர் வழங்கல் சபை), ராகினி, ரமணி ஆகியோரின் மாமனாரும், மணிமேகலா, மணிவண்ணன், கோகுலன், நர்மதா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-1-83 வியாழக்கிழமை 4 மணியளவில் 37A, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

இங்ஙனம், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

5753

## யாழ். எம் பி.யை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மையகத்துக்கு இடமாற்றம் பெறுகிறார். இலங்கை இராணுவத்தில் மேஜர் ஜெனரல் தரத்துக்கு அடுத்தபடியாக சிரேஷ்ட பிரிகேடியராக இவர் இருந்துவருகிறார்.

பிரிகேடியர் ரணதுங்கா மேலும் தெரிவித்ததாவது:-

### மீண்டும் அழைக்கப்படலாம்

திரு போசேஸ்வரன் மீதான விசாரணைகள் இன்னும் முழுதாக முற்றுப்பெறவில்லை சில வேளைகளில் அவர் மீண்டும் அழைக்கப்படலாம்.

யாழ் நகரில் வேறும் சில பிரமுகர்களும், விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர்.

### இளைஞர்கள் விசாரணை

இதுவரை நாம் பல இளைஞர்களை விசாரித்துள்ளோம். இவர்களிடமிருந்து பயங்கரவாதச் சம்பவங்கள்பற்றி அதிமுக்கிய தகவல்களைப் பெற்றுள்ளோம்.

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் தாக்குதல், கிளிநொச்சி வங்கிக்கொள்ளை ஆகியன பற்றிய தகவல்களையும் எமது பாதுகாப்பிலுள்ள பலர் சிறந்தமுறையில் எமக்கு வழங்கியுள்ளனர். இவற்றைக் கொண்டு எமது விசாரணையை மேலும் விரிவாக்குவோம்'' என்றார்'

' யாழ்ப்பாணம் மிகவும் அமைதியான பிரதேசம் சமாதானவிரும்பிகளே இங்கு அதிகமாகவிருக்கின்றனர்'' என்று தொடர்ந்த பிரிகேடியர் ரணதுங்கா ''சில விஷமிகளின் செயல்களால் பல குடும்பங்கள் நிர்க்கதியானது பற்றி நான் கவலையடைகிறேன்.

நான் இங்கு கடமையாற்றிய காலத்தில் நடைபெற்ற பல பாதுகாப்புச்சேவை உத்தியோகத்தர்களினதும் அகால மரணச் சடங்குகளில் கலந்துகொண்டேன்.

இவர்களின் மனைவிமார்கள் விதவைகளின் நிலையில் கதறிய காட்சிகள் என்னை நிலைதளரச் செய்துள்ளன.

### மீண்டும் வருவேன்

நான் கொழும்பு தலைமையகத்துக்குச் செல்கின்றேன். வெகுவிரைவில் இளைப்பாற உத்தேசித்துள்ளேன். அப்போது மீண்டும் யாழ்நகர் வந்து சுதந்திர மனிதனாக இப்பிரதேசத்தின் இயற்கைவளங்களை அனுபவிப்பேன்,' என்றார். (கி,

# "உண்மைக்குப் புறம்பாக என்மீது அபாண்டப் பழி!"

## பாராளுமன்றத்தில் பஸ்தியன் அறிக்கை

(கொழும்பு)

உண்மைக்குப் புறம்பாக அபாண்டமான பழியைத் தன் மீது சுமத்தியிருப்பதாக கொழும்பு மேற்கு தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அறிக்கையொன்றை விடுத்தார்.

அவ்வறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:

''82 டிசம்பர் 23ம் திகதி 'ஐலண்ட்' 'டிவயின' என்ற இரு பத்திரிகைகளிலும், எமக்கு எதிரான 'ஜனதின' பத்திரிகையிலும் செய்தி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

''சர்வஜன வாக்கெடுப்பு நடந்த 22ம் திகதி வாக்குச் சாவடி ஒன்றில் அரசியல்வாதி ஒருவர் சுழல் துப்பாக்கியை எடுத்து மிரட்டியதாகவும். அவருக்கு ஆதரவாக அவரது ஆதரவாளர்களும் நடந்து கொண்டதாகவும் அர்த்தம்படச் செய்திகள் வெளியிட்டுள்ளன. 'ஜனதின' பத்திரிகையும் 'டிவயின' பத்திரிகைப் படப்பிடிப்பாளர் இச்சம்பவத்தை நேரில் கண்டதாகவும் எழுதியுள்ளார் இது உண்மையாக இருந்திருந்தால் உடனடியாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்து நடவடிக்கை எடுத்திருக்கலாமல்லவா? சபாநாயகர் அவர்களே! எங்கள்ஒருவர்மீது உண்மைக்குப்புறம்பாக சாட்டப்பட்டுள்ள அபாண்டம் சிறப்புமீறச் பிரச்னையாகும் சர்வஜன வாக்கெடுப்பில் ஏற்பட்ட படுதோல்விதான் இப்படியான ஒருசெய்தி சோடிக்கப்பட்டதற்குக்காரணமாகும். நான் வாக்களிக்க ஒருதடவை வாக்குச்சாவடிக்குச் சென்றேனே தவிர, வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வாக்குச்சாவடிக்குச் செல்லவில்லை. பத்திரிகைச் செய்தியில் குறிப்பிட்டுள்ள மகளிர் கல்லூரி வாக்குச் சாவடிக்கு நான் செல்லவே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (இ)

## பயங்கரவாத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்தும் சொல்லாமலிருந்ததாக அமிர்தலிங்கம் பிலிப் குமாரசிங்கம் மீது தொடரப்பட்ட வழக்கு மார்ச் 10ம் தேதிக்கு ஒத்திப் போடப்பட்டது

வந்தாறுமூலை பாடசாலை ஆசிரியர் சம்பளப்பணத்தை கொள்ளையடித்ததாக ரி வாமதேவன் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கும்ஒத்தி வைக்கப்பட்டது (இ)

விபத்தில்

## கல்யாணசுந்தரம் படுகாயம்

சென்னை, ஜன. 5

தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம் கல்யாணசுந்தரம் இன்று பொன்னாச்சியில் நடந்த கார்-லொறி விபத்தில் படுகாயம் அடைந்து சேலம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இவ்விபத்தில் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் பலியானார். (உ)

## யாழ். மாநகர சபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றத்தின் 83-ம் ஆண்டுக்கான ஆரம்ப மாதாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 12-ம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் திரு இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இடபொதுச் சபைக் கூட்டத்தில் புதிய குழுக்கள் தெரிவுசெய்யப்படும்.

மராமத்து, மின்சாரம்,சுகாதாரம், நிதி ஆகிய நான்கு பகுதிகளுக்குமான குழுக்களே நியமிக்கப்படவுள்ளன

யாழ். மாநகராட்சி மன்றத்தின் துணைமுதல்வராக இருந்த திரு எம். அலோசியஸ் முன்னேற்பாட்டின்படி இராஜினாமாச் செய்துள்ளதால் திரு. என் ரி செல்லத்துரை துணைமுதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இம்மாதம் 19ம் திகதி துணைமுதல்வராக பதவியேற்றுக்கொள்வாரெனத் தெரிவிக்கப்படுகிறது (மா)

# ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு

தினசரி மாலை 7-45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு

கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22370—22438—22537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி
தொலை பேசி இல; 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105,ஒல்கொட் மாவத்தை,புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866

## தேர்தல்கலவரம்; இருவர் பலி!

புதுடில்லி ஜன.5

ஆந்திரா கர்நாடக திரிபுரா மாநிலங்களின் சட்டபேரவைக்கான தேர்தல், இன்று நடைபெற்றபோது சில இடங்களை தவிர்ந்த மற்ற இடங்களில் அமைதி நிலவியது.

கமலாபுரத் தொகுதியில் இரு கோஷ்டியினருக்கிடையில் ஏற்பட்டமோதலில துப்பாக்கி சூட்டிற்கு இருவர் பலியானார்கள். (உ)

## துப்பாக்கிமுனை..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முனையில் திருமதி குமாரசாமியிடம் 6 பவுண் தாலிக்கொடி, காப்பு தோடு ஆகியவற்றைக் கொள்ளையடித்தபின், சுட்டுப் பயமுறுத்திவிட்டுச் சென்றுள்ளாராம் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைசெய்துவருகின்றனர் [க]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தி வீதி, 56-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.